


නාවෙළි
NAAVELI
# நாவெளி
பிரதேச செயலக மாதாந்த மின்னிதழ்
DIVISIONAL MONTHLY E- MAGAZINE ප්‍රාදේශීය මාසික ඉ - සඟරාව
www.navithanveli.ds.gov.lk moha.divi.navithanveli@gmail.com DSNavithanveli 0755424333




மலர்: 09 ✦ இதழ்:21 ✦ 2024ஆம் வருடம் புரட்டாசி மாதம் இருபத்தைந்தாம் திகதி

## நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு தேசிய விருது



2023 காலப்பகுதியில் சுகவனிதையர்களுக்கான சேவை வழங்குதலில் **(well women program)** நாடளாவிய ரீதியில் உள்ள **354** சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களில் முதல் **14** இடங்களினுள் நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்தினால் **2024** ஜூலை **16**ஆம் திகதி கொழும்பு **UCFM** மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் விருது வழங்கல் நிகழ்வில் பிரதம அதிதியாக சுகாதார அமைச்சின் செயலாளர் கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைத்தார்.

தொடர் 08ஆம் பக்கம்...

## பிரதேச மட்ட யானைகள் பாதுகாப்பு, மனித மோதல்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு கூட்டம்.



பிரதேச மட்ட யானைகள் பாதுகாப்பு மற்றும் யானை மனித மோதல்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு கூட்டம் உதவிப் பிரதேச செயலாளர் திரு. பே.பிரணவரூபன் அவர்களின் தலைமையின்கீழ், 2024 செப்டம்பர் 13ஆம் திகதியன்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இக் கூட்டத்தில் சமுர்த்தி தலைமை யக முகாமையாளர் திரு.செ.சிவம், நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவுக்கு பொறுப்பான வன ஜீவராசிகள் திணைக்களத்தின் சுற்று வட்டக் காப்பாளர் திரு.லோரன்ஸ் அவர்களும் கலந்து கொண்டார். மேலும் கமநல சேவை அமைப்புக்கள், சவளக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் நாவிதன்வெளி பிரதேச சபை பிரதிநிதிகள், கமநல சேவை நிலையத்தின் அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள், கோட்டக் கல்வி பணிமனையின் அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின்

தொடர் 08ஆம் பக்கம்...

## சாதனைப் புதல்வன்




**32** செக்கனில் **2x2 Rubik** செய்து முடிக்கப்பட்ட **Cube Video** மற்றும் புகைப்படங்கள் என்பவற்றை உறுதிப் படுத்திய நிலையில் **IBR** குழுவினரால் சாளம்பக்கேணி - **01** இல் வசித்து வருகின்ற முஹம்மட் முன்ஸிப் எனும் தரம் **3** இல் கல்வி கற்கின்ற மாணவன் சாதனையாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட சாளம்பக் கேணி - **01** இல்

தொடர் 08ஆம் பக்கம்...

## நாவிதன்வெளி சமுர்த்தி வங்கி சிறந்த செயற்திறன் விருதுக்காக தெரிவு



**Sri Lanka Telecom** நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ் நிலை முறைமையூடான கணக்கு முகா மைத்துவ செயற்திட்டத்தின் செயற் திறன் அடிப்படையிலான தரப்படுத்த லில் இலங்கையிலுள்ள **1048** சமுர்த்தி வங்கிகளில் முதல் **100** சமுர்த்தி வங்கிகளில்

தொடர் 08ஆம் பக்கம்...

## ஆசிரியரிடமிருந்து...

நாவெளி மலர் - 09 இல் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் அளவற்ற மகிழ்ச்சி. நாலா பக்கமும் பரந்து கிடக்கின்ற பல்வேறு செய்திகள், மற்றும் பல்சுவை அம்சங்களைத் தாங்கிய வகையில் நாவெளி இலத்திரனியல் சஞ்சிகை -09 வெளி வருகின்றது. இது வாசகர்கள் மத்தியில் பல மாற்றத்தினைத் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆதியில் தொடங்கிய மனிதனின் நடைப்பயணம் பல்வேறு மாற்றங்களுக்குப் பிறகு, இன்று செவ்வாய்க்கும், அதற்கு அப்பாலும் நீண்டு கொண்டு இருக்கின்றது. காலத்திற்கு தகுந்தவாறு மாறிக் கொண்டவர்களுக்கு சில வாய்ப்புகளும் கிடைத்தது. இரவு பகலாகின்றது. பகல் இரவாகின்றது. கோடை போய் குளிர் வருகின்றது. வரட்சி போய் வெள்ளம் வருகின்றது. பூ காயாகின்றது. காய் கனியாகின்றது. கனி செடியாகின்றது. இளமை மாறி முதுமை ஆட்சி செய்கின்றது.

மாற்றம் மட்டும் தான் நிரந்தரம். அனைத்து உயிரினங்களும், அவற்றுக்கே உரித்தான குணங்கள், மற்றும் பண்புகளை உள்ளடக்கி இருக்கின்றன. அவை தான் நிலையானது என்றும் நம்பப்படுகின்றது.

“மாற்றம் ஒன்றே மாறாதது” என்ற இந்த பொன்மொழியைச் சொன்னவர் ஹெராகிளிடஸ் என்ற கிரேக்க நாட்டு அறிஞராவார். இவர் கிரேக்கத்தில் சொன்னதை ஆங்கிலத்தில் “மாற்றம் ஒன்றே மாறாதது” (Change is the only immutable) மற்றும், “மாற்றம் ஒன்றே மாறாதது” “மாற்றம் ஒன்றே நிலையானது” (Change is the only constant) என்று இரண்டு விதமாக மொழி பெயர்த்தனர். இன்னும் சிலர் “There is nothing permanent, except Change” என்றும் கருதினர்.

புதிய புதிய முறைகள் கண்டு பிடிக்கப்படும் போது பழைய முறைகள் மாறித்தான் போகும். மாற்றம் எப்போதும் நிகழ்ந்து கொண்டே இருக்கும். அந்த மாற்றத்திற்கேற்ப மக்களின் வாழ்க்கை முறையும் மாறிக் கொண்டே தான் இருக்கின்றது. புதிய உத்திகளைக் கையாளும் போது சிலருக்கு பாதிப்பு ஏற்படத்தான் போகின்றது. அவர்களும் மாற்றங்களுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

கையில் நேர்மையும், வாயில் மெய்யும் இருந்தால் கண்டிப்பாக வறுமை வந்து வாட்டாது. எதுவும் நிரந்தரம் இல்லாத இந்த உலகில் மாற்றங்கள் மட்டுமே மாறாத ஒன்று.

என்றும் அன்புடன்,
ஆசிரியர்.

அறம் ஒன்றுதான் நம்மை மறு உலகிலும் நண்பனாகத் தொடர்ந்து வருகிறது. மற்றவை எல்லாம் சரீரத்தோடு நாசமாகி விடுகின்றன.
-பஞ்சதந்திரம்



வாழ்கைத்தத்துவங்கள்

01. இறைவன் உங்கள் உருவங்களையோ, உங்கள் செல்வங்களையோ பார்ப்பதில்லை. மாறாக உங்கள் உள்ளங்களையும், செயல்களையும் பார்க்கின்றான்.

02. தந்தை தன் மக்களுக்கு அளிக்கும் அன்பளிப்புகளில் மிகச் சிறந்தது அவர்களுக்கு அளித்திடும் நல்ல கல்வியும், நல்லோக்கப் பயிற்சியும் ஆகும்.

03. உம்முடைய உறவை துண்டித்து வாழ்பவனுடன் நீ சேர்ந்து வாழு. உமக்கு அநீதம் இழைத்தவனை மன்னித்து விடும்.

04. நற்குணம் என்பது நம்பிக்கைக் குரிய அடையாளமாகும். தீயகுணம் என்பது நயவஞ்சகத்தின் அடையாளமாகும்.

05 நெருப்பு விறகைச் சாம்பலாக்கி விடுவதைப் போல் பொறாமை நற்செயல்களை சாம்பலாக்கி விடும்.

06.தன் நாவையும், வெட்கத்தலத்தையும் ஒருவர் பாதுகாத்து கொள்வதாக பொறுப்பேற்றால் அவருக்கு சுவனம் கிடைத்திட நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

07.நீங்கள் விரும்புவதை உண்ணுங்கள். விரும்புவதை அணியுங்கள். ஆனால் ஒரு நிபந்தனை, உங்களிடம் கர்வமும், வீண்விரயமும் இருக்கக் கூடாது.

08. குத்துச்சண்டையில் அடுத்தவனை வீழ்த்துபவன் வீரன் அல்ல. மாறாக, கோபம் வரும் போது தன்னைத்தானே அடக்கி கொள்பவனே வீரன் ஆவான்.

நாவெலி NAAVELI நாவெளி
அபிவிருத்திப் பாதையில்
பிரதேச செயலகம் - நாவிதன்வெளி - Divisional Secretariat - Navithanveli
03
புதன்கிழமை
25.09.2024

# பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம்

T.SASIDEVI - DEVELOPMENT OFFICER

2024ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களால் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் 22.905 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அபிவிருத்தி வேலைகள் வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டுள் ளன. இந்நிதி ஒதுக்கீட்டின்கீழ் சமய ஸ்தலங்கள், மயானங்கள், பாடசாலை கள், சமூக மட்ட அமைப்புகள் மற்றும் வீதி விளக்குகள் பொருத்துதல் போன்வற்றிற்காக ஒதுக்கீடு செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த வகையில், கௌரவ.த.கலையரசன் (பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களால் ஆலய புனரமைப்பு, பாடசாலை, விளையாட்டுக் கழகங்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புகள் போன்றவற்றிற்கான கட்டட நிர்மாணம் மற்றும் பொருட் கொள்வனவு ஆகிய 21 வேலைத் திட்டங்களுக்காக 11.145 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டுள்ளது.



மேலும், கௌரவ.S.M.M.முஸாரப் (பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்) அவர்களால் பள்ளிவாசல்கள் புனரமைப்பு,அபிவிருத்தி, பாடசாலை, விளையாட்டுக் கழகங்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புகள் போன்றவற்றிற்கான கட்டட நிர்மாணப் பணி மற்றும் பொருட்கொள்வனவு ஆகிய 14 வேலைத் திட்டங்களுக்காக 3.4 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வெற்றிகரமாக முடிவுறுத்தப் பட்டுள்ளது.

மேலும், கௌரவ.பைசால்காசிம் (பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களால் பள்ளிவாசல்கள் புனரமைப்பு, மயான அபிவிருத்தி, பாடசாலை, விளையாட்டுக் கழகங்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புகள் போன்றவற்றிற்கான கட்டட நிர்மாணம் மற்றும் பொருட் கொள்வனவு ஆகிய 24 வேலைத் திட்டங்களுக்காக 3.95 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வெற்றிகரமாக முடிவுறுத்தப் பட்டுள்ளது. மேலும், கௌரவ.H.M.ஹரீஸ் (பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களால் பள்ளி வாசல்கள் புனரமைப்பு, மயான அபிவிருத்தி, பாடசாலை, விளையாட்டுக் கழகங்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புகள் போன்றவற்றிற்கான கட்டட நிர்மாணம் மற்றும் பொருட் கொள்வனவு ஆகிய 25 வேலைத் திட்டங்களுக்காக 3.41 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டுள்ளது.



மேலும், கௌரவ விமலவீர திஸாநாயக (பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களால் வீதி விளக்கு பொருத்துதல் மற்றும் சமூக மட்ட அமைப்புகள் போன்ற 02 வேலைத் திட்டங்களுக்காக 0.3 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டுள்ளது.



மேலும், கௌரவ WD. வீரசிங்க (பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ) அவர்களால் ஆலய புனரமைப்பு மற்றும் சமூக மட்ட அமைப்புகள் போன்ற 02 வேலைத் திட்டங்களுக்காக 0.7 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டுள்ளது.



அந்தவகையில் 2024ஆம் ஆண்டு நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத் தின்கீழ் கௌரவ பாராளுமன்ற உறுப்பி னர்களால் என்றுமில்லாதளவு அதிக ளவான நிதி ஒதுக்கீடானது ஒதுக்கப் பட்டு அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு அவை பயனுள்ள வகையில் வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்க அம்சமாகும்.







# அனல் பறந்த ட்ரம்ப் - கமலா ஹறிஸ் நேரடி விவாதம் அமெரிக்க பொருளாதாரம் முதல் கருக்கலைப்பு சட்டம் வரை

P.RUPAN - DEVELOPMENT OFFICER




அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் களத்தில் அதி முக்கியமான டொனால்ட் ட்ரம்ப் - கமலா ஹறிஸ் நேரடி விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் அமெரிக்கப் பொருளாதார நிலவரம் முதல் கருக் கலைப்புச் சட்டம் வரை அனல் பறக்கும் விவாதம் நடைபெற்றது. வரும் நவம்பர் 5ஆம் திகதி அமெரிக் க ஜனாதிபதி தேர்தல் நடைபெறுகிறது. இதில் குடியரசு கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஜனநாய க கட்சி சார்பில் கமலாஹறிஸ் போட்டியிடுகின்றனர். இதுவரை யிலான கருத்துக் கணிப்புகள் பலவும் கமலா ஹாரிஸுக்கு சற்றே வெற்றி வாய்ப்பு கூடுதலாக இருப்பதாக சுட்டிக் காட்டும் சூழலில் இந்த விவாதத்துக்குப் பின்னர் அதன் போக்கு எப்படி மாறுகிறது என்பது தெரியவரும். அதனால் டொனால்ட் ட்ரம்ப் - கமலா ஹறிஸ் நேரடி விவாதம் சர்வதேச கவனம் பெற்றுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர் களான கமலா ஹறிஸ் - டொனால்ட் ட்ரம்ப் இடையிலான நேருக்கு நேர் விவாதத்தை அமெரிக்காவின் பிலடெல்பியாவில் ஏபிசி ஊடகம் ஏற்று நடத்துகிறது. நேரடி ஒளிபரப்பு ஏபிசி நியூஸ் லைவ் டிஸ்னி மற்றும் ஹுலு ஆகியவற்றில் ஒளி பரப்பப்படுகிறது.

'ஆட்டிப் படைக்கும் வேலைவாய்ப் பின்மை'... விவாதத்தைத் தொடங்கிய ஜனநாயக கட்சி வேட்பாளர் கமலா ஹாரிஸ், ட்ரம்ப் ஆட்சியின் கீழ் தான் அமெக்கா மிகப் பெரிய வேலைவாய்ப்பின்மை சிக்கலை எதிர் கொண்டது. அமெரிக்கப் பொருளா தாரத்தின் பெரும் மந்தநிலை காலத்துக்குப் பின்னர் மோசமான வேலைவாய்ப்பின்மை சிக்கல் ட்ரம்ப் ஆட்சியில் தான் நிகழ்ந்தது. ஆனால் நான் ஜனாதிபதியானால் அந்த நிலை மாற்றப்படும். அமெரிக்காவில் வாய்ப்புகளைத் தரும் பொருளாதாரத் தை கட்டமைக்க விரும்புகிறேன். அமெரிக்காவில் வீட்டு வசதியை கையடக்க விலைக்குக் கொண்டு வருவேன். குழந்தை வரிக்கடன் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.



ட்ரம்ப் ஜனாதிபதியானால் அவர் ட்ரம்ப் விற்பனைவரி கொண்டு வருவார். அதாவது அன்றாடம் நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளுக்கும் 20 சதவீதம் வரி விதிக்கப்படும் என்றார். கருக்கலைப்பு உரிமைகள் கருக்கலைப்பு உரிமைகள் பற்றி பேசுகையில் "ட்ரம்ப் ஜனாதிபதியா னால் தேசம் தழுவிய கருக்கலைப்பு தடை அமலுக்கு வரும். பாலியல் வன்கொடுமைகள் நெருங்கிய குடும்ப உறவுகளுக்கு இடையேயான தகாத பாலுறவு மூலம் உருவாகும் கருவினை கலைப்பது கூட ட்ரம்ப் ஆட்சி அமைந்தால் கடினமாகிவிடும். அதனால் ட்ரம்ப்பை ஆதரிக்கக் கூடாது" என்றார். அப்போது ட்ரம்ப் "சில மாகாணங்களில் குழந்தைகள் பிறந்த பின்னர் கொல்லப்படுகின்றனர். ஜனநாயகக் கட்சி 9வது மாதத்தில் கூட கருக்கலைப்பை அனுமதிக்க வேண்டும் என விரும்புகிறது." என்றார். அப்போது குறுக்கிட்ட நெறியாளர் அமெரிக்காவில் குழந்தை கள் பிறந்த பின்னர் கொலை செய்யப்படுவதை எந்த மாகாண சட்டமும் அங்கீகரிக்கவில்லை என்று தெரிவித்தார். "கருக்கலைப்பு உரிமை யை ரத்து செய்து 02 ஆண்டுகளுக்கு முன்பு தீர்ப்பளித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகளில் 03 பேர் டிரம்பால் நியமனம் செய்யப்பட்டவர்கள்" என்று கமலா ஹாரிஸ் சுட்டிக்காட்டினார். ரஷ்யா - உக்ரைன் போர் 31வது மாதமாக நீடித்து வரும் நிலையில் அது குறித்துப் பேசிய கமலா ஹாரிஸ் "எங்களுக்கும் ஜெலன்ஸ்கிக்கும் இடையே நல்லுறவு இருக்கிறது. நல்லவேளை இந்த போர் மூண்ட தருணத்தில் நீங்கள் (ட்ரம்ப்) அதிபராக இருக்கவில்லை. இல்லாவிட்டால் இந்நேரம் புதின் கீவ் நகரில் அமர்ந்து கொண்டு ஐரோப்பிய நாடுகளை எப்படித் தாக்குவது என்று திட்டம் தீட்டிக் கொண்டு இருந்திருப்பார். புதின் ஒரு சர்வாதிகாரி. அவர் உங்களை மதிய உணவாக புசித்து விடக்கூடும்" என்று எச்சரித்தார்.

அதற்குப் பதிலளித்த ட்ரம்ப் "கமலா ஹாரிஸ் தான் அமெரிக்க வரலாற்றிலேயே மிக மோசமான துணை ஜனாதிபதி. உக்ரைன் - ரஷ்யப் போரை அவர் தடுக்கத் தவறிவிட்டார்" என்றார். "ட்ரம்பின் இந்தக் குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன். அவர் பிரச்சினையை திசை திருப்பி பிரித்தாள முயற்சிக்கிறார். அவருக்கு எப்போதுமே சர்வாதிகாரிகள் மீது அபிமானம் உண்டு என்பது அனைவரும் அறிந்ததே.



அவர் தன்னை ஒரு சர்வாதிகாரி யாகப் பார்க்கவே விரும்புகிறார்" என்று பதிலடி கொடுத்தார். இவ்வாறாக ட்ரம்ப் - ஹாரிஸ் நேரடி விவாதங்களை காட்டியது. இந்த விவாதத்துக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் மீதான எதிர்பார்ப்பும் அதிகரித்துள்ளது.

# தெளிவு

## சிறுகதை

வீரமுனை அருள் சுதன்

"அம்மா...அம்மா...என்ட ஸ்கூல் வேக் எங்க?...அதில் எல்லா புத்ததகங்களையும் எடுத்துவச்சிட்டீங்களா?..நேரம்போய்ட்டு, கெதியா எடுத்துதாங்கம்மா....?" என பாடசாலைக்கு செல்ல பரபரப்பாக ஆயத்தமாகிக் கொண்டிருந்த பாலனின் அவசரத்தை கண்ட தந்தை சண்முகம் "மகன் இன்னா இருக்கு. ஒன்ட பாடப்புத்தக வேக்கு, நான் அதை சரியா அடுக்கிவச்சிட்டன், நீ முதலில் உங்கம்மா தரும் சாப்பாட்டை சாப்பிடு மகன்" எனக் கூறியவாறே மனைவி காமாட்சியை அழைத்தார். கையில் பழைய சோற்றுடன் வந்த காமாட்சி இரவு வைத்த கருவாட்டுக் குழம்பையும் சோற்றுடன் கலந்து பிசைந்து மகனுக்கு ஊட்டினாள். "போதும்மா...போதும்...”எனக் கூற "இந்தக் கடைசி ஒருவாய்ச் சாப்பாட்டையும் சாப்பிடு”என பிசைந்து ஊட்டி விட்டாள். வயிறு நிரம்பிய பாலன் பெற்றோரது கால்களில் விழுந்து ஆசிபெற்று பாடசாலைக்கு விரைந்தான். மாநிறமும் மதிவதனமும் கொண்டபாலன் தரம் ஐந்துதான் படிக்கிறான். இன்னும் ஒருசில நாட்களில் கொலசிப் பரீட்சை எழுதவுள்ளான். அவன் முனையூர் கிராமத்தில் ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்தாலும் கல்வியில் படுகெட்டிக்கார னாகவிருந்தான். தாய் தந்தையர் ஓலைக் குடிசையில் வாழ்ந்து கூலிவேலை செய்தாலும் அரைவயிற்றுக் கஞ்சியைக் கொண்டு தங்களின் வயிற்றை நிரப்பி மகனின் முழு வயிறை நிரப்பி அவன் படிப்பை பற்றியே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். தன் மகன் எப்படியாவது படித்து வைத்தியராக வரவேண்டுமென்பதே அவர்களின் எதிர்கால அவா. அதற்காக எவ்வளவும் பாடுபட தயாரானார்கள்.

"எனக்கு ஏதும் கஞ்சி மிச்சம் இருக்கா காமாட்சி" என்றார் சண்முகம். "இல்லங்க இருந்தத்த வடிச்சி மகனுக்கு கொடுத்திட்டன்" என்ற காமாட்சியைப் பார்த்து ஒரு மெல்லிய புன்னகையோடு "விடு..விடு.. நான் கணபதிர ரீக்கடையில போய் ரீ குடிச்சிட்டு உனக்கும் ஏதாவது வாங்கிட்டு வாறன். இன்டைக்கு ஒருத்தரும் கூலி வேலைக்கு கூப்பிடல்ல. யாராவது வேலைக்கு கூப்பிட்டாத்தான் நமக்கு மதியம் வயிறு நிரம்பும், எல்லாத்துக்கும் கடவுள்தான் கண் திறக்கனும்"...எனக் கூறி அவ்விடத்தைவிட்டு நடக்கலானார். நேரம் பத்து மணியாகியும் யாரும் வேலைக்கு அழைக்கவில்லை. கறிக்கும் வழியில்லை என யோசனையில் அப்படியே இருவரும் வீட்டுத் திண்ணை யில் அமர்ந்திருந்தனர்.

சண்முகத்தின் வீட்டை நோக்கி ஒரு மாணவன் ஓடோ வந்து சண்முகத்தை பார்த்து" இஞ்சருங்க, பாலனை ஸ்கூல் கணக்கு பாட டீச்சர் அடிச்சதால அவன் மயங்கி விழுந்திட்டான்... அதால உங்கள அதிபர் வரட்டாம்..." எனக் கூறியதும் "ஐயோ என் மகனுக்கு என்ன நடந்தது எனக் காமாட்சி அலறினாள். .அவளையும் அழைத்துக்கொண்டு பாடசாலைக்கு விரைந்தான் சண்முகம்.

பாடசாலையில் அதிபர் அறையில் பாலனை அடித்த ஆசிரியையை கண்டித்துக்கொண்டிருந்தார் அதிபர். ஓடி வந்த சண்முகம் அதிபரிடம் "என்னையா நடந்தது என் மகனுக்கு.... எங்க என் மகன்..." என்றதும், "பொறுங்கள் சண்முகம்... அவனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றிருக்கின்றோம்"
"ஏன் என்ன நடந்த என் மகனுக்கு"
"இந்தகணக்குப்பாட ரீச்சர் உங்கட மகன் பாடத்தை கவனிக்காம வகுப்பில் நித்திரை கொள்கிறான் எனக் கண்டித்து கைகளால் அடிக்க அவனது தலைபக்கத்திலிருந்த சுவரில் அடிபட்டு மயங்கி விட்டான்" என்று கூறினார் அதிபர்.

"ஏன் என் மகனுக்கு அடிச்சனீ? பாவிமகளே, உனக்கு ஒருபுள்ள இருந்தா இப்பிடி செய்வியா, பாவிமகளே, கணக்கு தெரியாட்டி நீதான் சொல்லிக் கொடுக்கனும். அதுக்கு அப்பிடி அடிச்சிருக்கிறாயே நீயெல்லாம் ஒருவாத்தியா..." என அந்த ஆசிரியையை மனதில் வந்தபடியெல்லாம் திட்டித் தீர்த்தாள் காமாட்சி.

கணக்குப் பாட ஆசிரியையும் புதிதாக திருமணமானவள். அவள் வேணுமென்றே இப்படி செய்ததில்லை, நன்றாகப் படிக்கும் பாலனை அவளுக்கும் நன்றாகப் பிடிக்கும், அன்றையநாள் அவள் விளங்கப்படுத்தும் பாடத்தை அவன் கவனிக்காமல் தூக்கமாகவும் சோர்ந்தும் நித்திரை செய்ததைகண்டு அவள் அம் மாணவன் மீதுகொண்ட அதிக அக்கறையில்தான் இவ்வாறு ஒருசிறுதண்டிப்பு செய்தாள். இது இத்தனை விளைவுகளை உண்டு பண்ணு மென அவள் கனவிலும் நம்பவில்லை. தான் அடிக்கும் போது அவ்வடியிலிருந்து தப்பிக்க பலமாக திரும்பும் போது படசாலை சுவர்தான் அவனை பலமாய் தாக்கியிருக்க வேண்டும் என்பது அவளுக்கு தெரியும். இருந்தும் அவனது நிலைக்குதானும் ஒரு காரணமென்று தலைகுனிந்து கண்ணீர் விட்டான். அவளது கண்ணீரையும் பொருட்படுத்தாது பொலிசாருக்கு தகவலளித்து அவ் ஆசிரியரை கைது செய்யுமாறு காமாட்சியே முறைப்பட்டாள். அதற்கு அதிபரின் மௌனமும் காரணமாகவிருந்தது. அழுத கண்ணீருடன் பொலீசால் கைது செய்யப் பட்டார் ஆசிரியை.

வைத்தியசாலைக்கு சென்ற சண்முகத்திற் கும் காமாட்சிக்கும் அதிர்ச்சியான செய்தி காத்திருந்தது. வைத்தியர் வெளியிலே வந்து சண்முகத்தைபார்த்து "உங்கள் மகன் இறந்து அரை மணி நேரமாகிறது..." என்றார். "ஐயோ என் மகனே..." என இருவரும் மாறிமாறி கதறி அழுது கண்ணீர் விட்டனர். "பாழாய் போன அந்தமனுசி என் மகன கொன்றிட்டாளே கடவுளே... இதற்கு ஒரு தீர்வு இல்லையா..." என அழுது புலம்பினாள் காமாட்சி.

மறுபடியும் மருத்துவர் வந்து சண்முகத்தை யும் காமாட்சியையும் அழைத்து "உங்கள் மகனின் பிரேத பரிசோதனை றிப்போட் வந்துட்டுது. அவர் பல்லி விசம் கலந்த உணவை அருந்தியதாலேயே இறந்துள்ளார் அவரது பிரேதத்தை நீங்கள் எடுத்துச் செல்லலாம்" எனக் கூறினார்.

திகைத்துப்போன காமாட்சி ஓடோடிச் சென்று காலையில் மகனுக்கு உணவாகக் கொடுத்த கருவாட்டுக் குழம்புச்சட்டியை எடுத்து நிலத்தில் ஊற்றினாள். அதில் இரண்டு பல்லிகளின் உடலெச்சம் வீழ்ந்தது. இரவில் கறிச்சட்டி சரியாக மூடப்படாமையால் வந்த விளைவே இது என்று உண்மையறிந்த காமாட்சி "ஐயோ...கடவுளே என் மகனை நானே கொன்று விட்டேனே......" ஏன உரத்த குரலில் விம்மிவிம்மி அழுதாள்". வானம் இருண்டது. வானமும் அவளுக்காக கண்ணீர் துளிகளை மழைகளாகப் பொழிந்தது. சுபம்...

# ஒரு நாட்டின் அபிவிருத்தியில் தரமான பொதுச் சேவையை வழங்குவதன் முக்கியத்துவம்

பத்திநாதன் இருதயராஜா, கல்லடி-மட்டக்களப்பு

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...



ஒரு நாட்டின் வளர்ச்சியில் பொது சுகாதார சேவைகளின் தரம் முக்கிய பங்கு வகிக்கிறது. பயனுள்ள பொது சுகாதார அமைப்புகள் நோய்களைத் தடுப்பதுடன் நோய்ப் பரவலையும் தோன்றலையும் கட்டுப்படுத்துகின்றன, இது மக்களின் நல்வாழ்வைப் பாதுகாக்கிறது. உதாரணமாக, தடுப்பூசி திட்டங்கள் மற்றும் நோய் கண்காணிப்பு ஆகியவை நோய்களின் திடீர் வெளிக்கிளம்பலைக் கட்டுப்படுத்த உதவுகின்றன அத்துடன் நாட்டில் ஆரோக்கியமான மக்களின் இருப்பை உறுதிப்படுத்துகின்றன. இது நோய் ஏற்படுவதால் உருவாகும் நோய் சிகிச்சை வழங்கத் தேவையான பொருளாதார சுமையை குறைக்கின்றன. கூடுதலாக, அவசரகால பதிலளிப்பு குழுக்கள் மற்றும் சட்ட அமுலாக்கம் போன்ற பொது பாதுகாப்பு சேவைகள், சமூக ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு அவசியமான ஒழுங்கு மற்றும் பாதுகாப்பை பேணுகின்றன. இந்த சேவைகளில் முதலீடு செய்வதன் மூலம், ஒரு நாடு தனது குடிமக்களைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், வளர்ச்சிக்கு உகந்த நிலையான சூழலையும் உருவாக்கிக் கொள்கிறது.

கல்வி என்பது தேசிய அபிவிருத்தியின் முக்கிய உந்துதலாக உள்ளது, மேலும் கல்விச் சேவைகளின் தரம் ஒரு நாட்டின் எதிர்காலத்தில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. உயர்தர பொதுக் கல்வி முறைகள் தனிப்பட்ட




மற்றும் தொழில்முறை வெற்றிக்குத் தேவையான அறிவு, திறன் மனப்பாங்கு கொண்ட தனிநபர்களை உருவாக்குகின்றன. இது பொருளாதார முன்னேற்றத்திற்கு முக்கியமான புதுமை படைத்தலையும் தொழில்நுட்ப முன்னேற்றத்தையும் வளர்க்கிறது. மேலும், கல்வியானது தருக்க சிந்தனை மற்றும் குடிமை ஈடுபாட்டை ஊக்குவிக்கிறது, இது மிகவும் அறிவுபூர்வமான மற்றும் சுறுசுறுப்பான குடிமக்களின் உருவாக்கத்தில் பங்களிக்கிறது. இதன் விளைவாக, கல்வியில் முதலீடு செய்வது மனித மூலதனத்தை மேம்படுத்துவதுடன் நீண்ட கால வளர்ச்சி இலக்குகளையும் அடைந்து கொள்ள உதவும்.

நீர் வழங்கல், சுகாதாரம் மற்றும் கழிவு முகாமைத்துவம் போன்ற உட்கட்டமைப்பு தொடர்பான பொது சேவைகள் அன்றாட வாழ்க்கை மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு அடிப்படையாகும். நம்பகமான உட்கட்டமைப்பு அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்துகொள்ள உதவுகிறது, அத்துடன் பொருளாதார பரிவர்த்தனைகளை எளிதாக்குவதுடன் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துகிறது. சுற்றுச்சூழலுக்கு உகந்த திட்டங்கள் மற்றும் திறமையான வள முகாமைத்துவம் உள்ளிட்ட நிலையான உள்கட்டமைப்பு நீண்ட கால வளர்ச்சிக்கு அவசியம். பொது சேவைகளில் நிலைத்தன்மைக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், நாடுகள் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ளவும் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கான வளங்களை பாதுகாக்கவும் முடியும்.


இந்த அணுகுமுறையானது உடனடி வளர்ச்சியை அடைந்து கொள்வதை நோக்காகக் கொண்டது மட்டுமல்லாது அடையப்படும் வளர்ச்சி நீண்ட காலத்திற்கு நிலையானதாகவும் இருப்பதை உறுதி செய்கிறது. பொது சேவைகளின் தரம் அரசாங்க நிறுவனங்களின் வினைத்திறன் மற்றும் பொறுப்புக்கூறும் உணர்வையும் பிரதிபலிக்கிறது. நன்கு நிர்வகிக்கப்படும் பொதுச் சேவைகள் வெளிப்படைத்தன்மை மற்றும் பயனுள்ள நிர்வாகத்திற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பைக் குறிக்கின்றன. குடிமக்கள் உயர்தர சேவைகளை அனுபவிக்கும் போது, அவர்கள் பொது நிறுவனங்களை நம்புவதற்கும், குடிமை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் அதிக வாய்ப்புள்ளது. மாறாக, மோசமான சேவைத் தரம் போது மக்களின் அதிருப்திக்கு வழிவகுக்கும் அத்துடன் பொதுமக்களின் நம்பிக்கையையும் சிதைக்கும். எனவே, தரமான பொதுச் சேவைகளில் முதலீடு செய்வது உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டுமல்ல, அரசாங்கத்திற்கும் அதன் குடிமக்களுக்கும் இடையே நேர்மறையான உறவை வளர்ப்பதற்கும் அவசியம் ஆகும்.

சுருக்கமாக, ஒரு நாட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொள்ளும்போது தரமான பொது சேவைகளை வழங்குவதன் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிட முடியாது. தரமான சேவைகள் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன, சமூக ஒப்புரவை மேம்படுத்துகின்றன, பொது சுகாதாரத்தை மேம்படுத்துகின்றன மற்றும் நிலையான வளர்ச்சியை நோக்கி ஒரு நாட்டை வழிநடாத்துகின்றன. அவை அரசாங்க நிறுவனங்களின் செயல்திறனைப் பிரதிபலிப்பதுடன் சமூக ஸ்திரத்தன்மைக்கும் பங்களிக்கின்றன. நாடுகள் முன்னேற்றத்திற்காக பாடுபடுகையில், ஒரு செழிப்பான மற்றும் தேசத்தின் அனைத்து மக்களையும் உள்ளடக்கிய சமுதாயத்தை உருவாக்குவதற்கு பொது சேவைகளின் தரத்திற்கு முன்னுரிமை அளிப்பது அவசியம்.

இந்தச் சேவைகளில் முதலீடு செய்வதன்மூலம், நீண்டகால வளர்ச்சிக்கான உறுதியான அடித்தளத்தை நாடுகள் அமைத்து, தங்கள் குடிமக்கள் அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்தை உறுதிசெய்ய முடியும்.

# டெலிகிராம் செயலிக்கு தடையா? சர்ச்சைக்குள்ளான *Pavel Durov* கைதின் பின்னணி!

ICT UNIT - DIVISIONAL SECRETARIAT, NAVITHANVELI






‘டெலிகிராம்’ இந்த செயலியைப் பயன்படுத்தாத, தெரியாத இளைஞர்கள் குறைவு என்றே சொல்லலாம். ஆனால் உலகம் முழுவதும் தற்போது டெலிகிராமுக்கு எதிரான குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. மேலும் இந்தியா போன்ற ஆசியாவின் முக்கிய நாடுகளில் டெலிகிராமை தடை செய்யப் போவதாகத் தகவல்களும் பரவி வருகின்றன.

## பின்னணி என்ன?

ரஷ்யா, உக்ரைன் உள்ளிட்ட நாடுகளில் பெரும்பாலும் டெலிகிராம்தான் பயன்படுத்தப்படுகிறது. ரஷ்யா, உக்ரைன் மத்தியில் போர் நிலவி வருவது நாம் அனைவரும் அறிந்ததே. இந்த இரு நாடுகளும் போர் குறித்த தகவல்களை டெலிகிராம் மூலம்தான் தங்களுக்குள் பகிர்ந்துகொள்கிறார்கள். ஏற்கெனவே இந்த குற்றச்சாட்டு டெலிகிராம் மீது இருந்துவந்த நிலையில், கடந்த ஆகஸ்ட் 24 ஆம் திகதி டெலிகிராமின் தலைமை நிர்வாக அதிகாரி பாவேல் துரோவை (Pavel Durov) பிரான்ஸைச் சேர்ந்த குழந்தைகள் உரிமை பாதுகாப்பு நிறுவனம் கைது செய்தது. இதற்குக் காரணமாக டெலிகிராமில் போதை மருந்து கடத்தல் தகவல்கள், குழந்தைகளின் பாலியல் வன்கொடுமை புகைப்படங்கள் ஆகியவைப் பகிரப்படுவதாகவும், பாவேல் துரோவ் சைபர் சட்டங்களைப் பின்பற்றவில்லை எனவும் கூறப்பட்டது.



## யார் இந்த பாவேல்துரோவ் (Pavel Durov)?

உலகம் முழுவதும் பரபரப்பாகப் பேசப்படும் டாப் இளம் தொழில் முனைவோர்களில் ஒருவர் பாவேல் துரோவ் (Pavel Durov) (வயது 39). இவரது சொந்த நாடு ரஷ்யா. டெலிகிராமுக்கு முன்பு, இவர் ரஷ்யாவில் பிரபல சமூகவலைத்தள நிறுவனமான விகொன்டாக்டேவை (VKontakte) தொடங்கி நடத்தி வந்துள்ளார்.

இந்த நிறுவனத்தில் உள்ள அரசுக்கு எதிரான குழுக்களைத் தடை செய்யுமாறு ரஷ்ய அரசு வைத்த கோரிக்கையை நிராகரித்துவிட்டு, இவர் 2014ஆம் ஆண்டு ரஷ்யாவிலிருந்து துபாய்க்குச் சென்றுவிட்டார். இந்த பிரச்னை நடப்பதற்கு ஒரு ஆண்டுக்கு முன்பே, அதாவது ஆகஸ்ட் 2013 ஆம் ஆண்டு பாவேல் துரோவ் (Pavel Durov) டெலிகிராமை அறிமுகப்படுத்திவிட்டார். டெலிகிராம் தலைமையகம் துபாயில் இயங்கி வருகிறது.

## டெலிகிராம் என்றால்...

WhatsApp போல டெலிகிராமும் ஒரு Messaging App. ஆனால் WhatsApp ஐ விட, டெலிகிராமில் வசதிகள் மிக மிக அதிகம். WhatsApp இல் ஒரு குழுவில் 1,024 நபர்கள் மட்டும்தான் இணைய முடியும். ஆனால் டெலிகிராமில் 2 லட்சம் பேர் வரை ஒரு குழுவில் இருக்கலாம். WhatsApp இல் 16 MB அளவு வரையிலான ஆவணங்கள், வீடியோக்கள், புகைப்படங்கள் அனுப்ப முடியும் என்றால், டெலிகிராமில் 2GB வரையிலான ஆவணங்கள், வீடியோக்கள்,புகைப்படங்கள் அனுப்ப முடியும். இந்த வசதிகளால் பலரும் டெலிகிராமை பயன்படுத்த ஆர்வம் காட்டுகின்றனர்.

## டெலிகிராம் மீது இருக்கும் குற்றசாட்டுகள்.

நிதி மோசடி, போதைப் பொருள் கடத்தல் தகவல்கள், குழந்தைகளின் பாலியல் வன்கொடுமை புகைப் படங்கள் பகிர்வுகளைத் தாண்டி டெலிகிராமில் தீவிரவாதம், தகவல் கசிவு, ஹேக்கிங், திருட்டு, ஏமாற்று வேலை என நிறைய நடந்து வருகின்றன. டெலிகிராம் என்ன கூறுகிறது? டெலிகிராம் நிறுவனம் தங்களது தலைமை நிர்வாக அதிகாரியின் கைது குறித்து வெளியிட்ட அறிக்கையில், “சமூக வலைத்தளத்தில் பகிரப்படும் தகவல்களுக்கு, அந்த வலைத்தளத்தின் நிறுவனரைக் காரணமாக்குவது அபத்தமானது.” என்று தெரிவித்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் 28ஆம் திகதி பாவேல் துரோவ் பொலிஸ் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு மாற்றப்பட்டுள்ளார். இதன் படி இவர் 5 மில்லியன் யூரோக்களை டெபாசிட் செய்ய வேண்டும். மேலும் இவர் பிரான்ஸை விட்டு எங்கும் செல்லக்கூடாது என்று உத்தரவிடப் பட்டுள்ளது. ஒருவேளை பாவேல் துரோவின் குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவருக்கு கிட்டதட்ட 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைக்கும்.

‘குற்றம் நிரூபிக்கப்படுகிறதா? என்ன ஆகும்?’ என்று பொறுத்திருந்து பார்ப்போம்...

## நாவிதன்வெளி சுகாதார வைத்திய...

தேசிய விருதொன்றினைப் பெற்று பிராந்தியத்தின் பெருமையை மேலோங்கச் செய்தமைக்காக நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் இதற்காக உழைத்த உத்தியோகத்தர்களுக்கு கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

## பிரதேச மட்ட யானைகள் பாதுகாப்பு...

20 கிராமசேவகர் பிரிவுகளுக்கும் பொறுப்பான கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர், குடியேற்ற உத்தியோகத்தர், காணி பயன்பாட்டு வெளிக்கள உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்றோர்கள் சமூகமளித்திருந்தனர்.

மேலும் இக்கூட்டத்தின்போது, யானைகள் மனித மோதல்கள் மற்றும் யானைகளின் இறப்பை தடுத்து பாதுகாப்பதற்கான வழிகள் பற்றியும் யானைகளினால் ஏற்படும் சேதத்தினை தடுப்பதற்கு ஏற்ற வழிமுறைகளான, யானைகளை வெடி மூலம் விரட்டல், முட்கள் உள்ள பழ மரங்களை நடல், திண்மக்கழிவு கொட்டப்படுகின்ற இடங்களை இல்லாமல் செய்தல் அத்தோடு சொறிக்கல்முனை எல்லை வீதிகளுக்கு மின்குமிழ் பொருத்துதல் மற்றும் பாதைகளின், இரு மருங்கிலும் உள்ள புதர்களை அழித்து சுத்தம் செய்தல் போன்ற தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன.

## சாதனைப் புதல்வன்....

வசித்து வருகின்ற ஆதம்பாவா பலாஹி, உசைன் பாஜிலா எனும் தம்பதிகளின் மூத்த புதல்வன் தான் முஹம்மட் முன்ஸிப். இவர் 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி பிறந்தார். தற்போது இவருக்கு வயது 8வருடங்களும், 5மாதங்களும் ஆகின்றது. இவர் தற்போது 4ஆம் கிராமத்தில் அமைந்துள்ள அல்-ஹிறா வித்தியாலயத்தில் தரம் 3 இல் கல்வி கற்று வருகின்றார். இவர் சிறுவயதில் இருந்து கல்வி, விளையாட்டு, கலை எனப் பலதுறைகளிலும் ஆர்வம் கொண்டவராகக் காணப்படுகிறார். அண்மையில் J&J Academy இனால் நடாத்தப்பட்ட 8 - 10 வயதுக்கு உட்பட்டோருக்கான மனக் கணிதப் போட்டியிலும் 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

சிறுவயதிலிருந்து வீட்டிலிருந்தே விளையாடுவதற்காக விளையாட்டுப் பொருட்கள் வாங்கும் போது பிள்ளையின் மூளை விருத்தியை தூண்டக் கூடிய பயனுள்ள விளையாட்டுப் பொருட்களையே வாங்கிக் கொடுப்பது வழக்கம் எனவும், இவ்வாறு வாங்கிக் கொடுக்கப்பட்ட பொருட்களில் ஒன்று தான் Rubik's Cube எனப்படும் ரூபிக் கனசதுரம் ஆகும் எனவும், மிகக் குறுகிய காலத்தில் தனது மகன் விரைவாகக் கற்றுக் கொண்டதைக் கண்ட இவரது பெற்றோர்கள் மேலும் பல வடிவங்களில் உள்ள 2X2 Rubik's Cube, Pyramid Rubik's Cube, 3x3 Rubik's Cube என பலவகையான Cube களை வாங்கிக் கொடுத்தனர் எனவும், அவ்வாறு வாங்கிக் கொடுக்கப்பட்ட Rubik's Cube ஐ அவரின் தாயின் மூலம் முறையாகக் கற்றுக் கொண்டார் எனவும் முன்ஸிப்பினுடைய தாயார் கூறினார். இவர் ஒரு Rubik's Cube உலக சாதனையைப் படைத்து உலக சாதனைப் புத்தகத்தில் தனது பெயரையும் பதிக்க வேண்டும் என்று முடிவெடுத்த இவரது தாய் இணைய வழியின் ஊடாக தகவல்களைத் திரட்டி International Book of Rcord இல் இணையவழியின் ஊடாக விண்ணப்பம் ஒன்றைப் பெற்று அதனைப் Print எடுத்து அதில் கேட்கப்பட்ட தகவல்கள் மற்றும் ஆவணங்கள் என்பவற்றை வழங்கினார் என்பதும், இவ் உலக சாதனையானது எமது நாட்டிற்கும் நாவிதன்வெளி மண்ணுக்கும் இவரது பெற்றோருக்கும், இவர் கல்வி கற்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்க்கக் கூடிய ஒரு விடயமாகக் காணப்படுவதோடு தற்போது காணப்படுகின்ற சந்ததிகளுக்கு ஒரு முன்உதாரணமாகவும் காணப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## நாவிதன்வெளி சமுர்த்தி வங்கி...

உள்வாங்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்டத்தின் 05 சமுர்த்தி வங்கிகளில் நாவிதன்வெளி சமுர்த்தி வங்கியும் ஒன்றாகும்.மேற்படி நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட இந் நிகழ்நிலை முறைமையினை மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தியமை, பாரம்பரிய முறையிலான கணக்கு வைத்தல் முறைமையினை முற்றாக நிறுத்தியமை மற்றும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த வங்கிச் சேவையினை வழங்கியமை போன்ற காரணங்களின் அடிப்படையிலேயே இத் தெரிவு இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஒரு சாதனையை இவ்வங்கி அடைந்து கொள்வதற்கு வங்கியின் முகாமையாளர் சட்டத்தரணி எம்.எம். எம். முபீன் அவர்களது சிறந்த வழி காட்டலும் அவ் வங்கி ஊழியர்களின் அர்ப்பணிப்பும் அளப்பரியது.

## மலசல கூட உதவிக்கான காசோலை வழங்கி வைப்பு



மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின்கீழ் தேசிய செயலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்தும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான மலசல கூட உதவி வழங்கும் நிகழ்ச்சி திட்டத்தின்கீழ், நாவிதன்வெளி பிரதேச செயலக அன்னமலை-02 கிராம சேவகர் பிரிவின்கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவருக்கான கொமட் வசதியுடன் கூடிய மலசல கூடத்தினை நிர்மானித்துக் கொடுப்பதற்கான ஒரு இலட்சம் ரூபாய் நிதிக்கான காசோலை, குறிப்பிட்ட பயனாளியின் குடும்பத்தினரிடம் 2024.09.12ஆம் திகதி நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களினால் வழங்கி வைக்கப்பட்டது.

# குறுக்கெழுத்துப் போட்டி இல.08 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 க | ட் | டு | ப் | 2 பா | டு | ■ | 3 இ |
| ங் | ■ | ■ | ■ | ட | ■ | 4 த | ரு |
| 5 கா | 6 த | ல் | ■ | 7 சா | ம | ர | ம் |
| 8 ரு | கு | ■ | 9 மா | லை | ■ | 10 வி | பு |
| ■ | 11 தி | 12 வ | லை | ■ | 13 ஓ | ம் | ■ |
| 14 ஆ | ■ | 15 ய | வி | 16 வை | ர் | ■ | 17 தா |
| 18 சா | ய | ல் | ■ | 19 அ | ப் | ப | ம் |
| மி | ■ | ■ | 20 தி | ரி | பு | ■ | பு |

## வெற்றியாளர்கள்

**1ஆம் இடம்**

இ. ஞபிகா
மண்டூர்

**2ஆம் இடம்**

சி. கிருபாசாகரீ
மட்டக்களப்பு

## பாராட்டு பெறுவோர்

A.ரம்மியா
வீரமுனை

ஜெ. ஜெசீலா பர்வீன்
நற்பிட்டிமுனை

யோ. விருக்ஷியா
வீரமுனை - 03

# குறுக்கெழுத்துப் போட்டி இல – 09

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | 3 | ■ | 4 | 5 |
| | ■ | ■ | 6 | | 7 | ■ | |
| 8 | 9 | 10 | ■ | 11 | | 12 | |
| 13 | | | ■ | 14 | | | |
| 15 | | | ■ | | ■ | ■ | |
| ■ | | ■ | ■ | ■ | 16 | 17 | ■ |
| 18 | | 19 | ■ | 20 | | | 21 |
| | ■ | 22 | | | | ■ | |

## இடமிருந்து வலம்

01. இது பொல்லாதது என்பர்.
04. மாங்காயின் இளம் பெயர். (திரும்பி)
06. பெண்ணின் பருவங்களில் ஒன்று. (குழம்பி)
08. சிறப்பானவர்கள். (திரும்பி)
11. தானாய் தோன்றுவது. (குழம்பி)
13. அடிபட்டால் ஏற்படுவது. (குழம்பி)
14. உறவுமுறை. (குழம்பி)
15. அளவு ஒன்று. (குழம்பி)
16. வையகம் என்று பொருள்படும்.
18. இது கரையுமாம். (குழம்பி)
20. இடர் என்றும் சொல்லாம்.
22. அழுகையின்போது ஏற்படுவது.

## மேலிருந்து கீழ்

01. சிலருக்கு இது சோதனைதான்.
02. யானையின் மறுபெயர்.
03. மருத்துவம். (குழம்பி)
05. கடலில் இருந்து கிடைக்கும் ஒரு அரிய பொருள். (குழம்பி)
07. கூரான ஆயுதம் ஒன்று.
09. கடவுளின் மனித அவதாரத்தை விவரிப்பது. (குழம்பி)
10. அரைக்க பயன்படுவது.
12. இசைக்கு இன்றி அமையாதது.
16. கடும் காற்று.
17. சூரியனுக்கும் இப்பெயர் உண்டு. (தலைகீழ்)
18. காலங்களில் ஒன்று.
19. இது பாடுவதும் ஒரு கலைதான்.
20. போதை தருவது. (தலைகீழ்)
21. எல்லோருக்கும் பிடித்த உறவு- (தலைகீழ்) (இறுதி எழுத்தை காணவில்லை)


**இதில் காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிக்கான உருவமைப்பின் கட்டங்களை வெற்றுத்தாளில் தயாரித்து சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அதனை புகைப்படம் எடுத்து 2024.10.15 ஆம் திகதி பி.ப.4.15 மணிக்கு முன் 0755424333 எனும் வட்சப் இலக்கத்துக்கு அனுப்பவும். அத்துடன் தங்களது பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் (மீள்நிரப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம்) என்பவற்றையும் அனுப்பவும்.**

RELOAD

முதலாம் பரிசு : 200/=
இரண்டாம் பரிசு : 150/=
மூன்றாம் பரிசு : 100/=

# கல்வியின் சிறப்பு

சுவேந்தர் பவித்ரா - விக்னேஸ்வரா சிறுவர் கழகம்







"கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டும் புண்ணுடையார்கல்லாதவர்" என்கிறார் வள்ளுவர். அதாவது கற்றவர் மட்டுமே கண்ணுடையவர்களாக் கருதப்படுவர், கல்லாதவர் கண்ணிருந்தும் முகத்தில் இரண்டு புண்ணுடையவராகக் கருதப் படுவர். ஒவ்வொருவருக்கும் கல்வி மிக அவசியமானது. கல்விதான் பிறப்பிலிருந்து இறப்புவரை மனிதனு டன் வரக்கூடியது.

கல்வியின் சிறப்பைப் பற்றி எடுத்துக் கூறினால், ஒரு நாட்டின் மன்னனையும், நன்றாக கற்றறிந்த ஒருவரையும் ஒப்பிட்டுப் பார்த்தால், மன்னனைவிட கற்றவரே சிறப்புடையவராகக் கருதப் படுவர். மன்னனுக்குதன் நாட்டை விட்டு வேறு இடத்திற்குச் சென்றால் சிறப்பு இல்லை. கற்றறிந்த ஒருவருக்கு செல்கின்ற இடமெல்லாம் சிறப்பு. இதுவே கல்வியின் சிறப்புக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

கல்வி என்பது மிகவும் அவசியமான தொன்றாகும். கல்வியின் அவசியம் என்னவென்றால், கல்விகற்றால் தான் இச்சமூகத்தில் நாம் உயர்ந்த அந்தஸ் தோடும் மற்றவர்கள் முன் மதிப்பவர் களாகவும் வாழலாம். நாம் இப்போது கஷ்ரப்பட்டு கற்றால்தான் வயோதிபர் ஆனபோது பெற்ற பிள்ளை எம்மைக் கைவிட்டாலும் கற்ற கல்வி ஒரு போதும் எம்மைக் கைவிடாது. படிப்பறிவு இல்லையென்றால் இச் சமூகம் எம்மை ஏறி மிதித்து சென்று விடும். கல்விகற்று உயர்ந்தவர்களுக்கு உதாரணமாக பலபேரைக் குறிப்பிடலாம். அப்துல் கலாம், ஆபிரகாம் இலிங்கன், தோமஸ் அல்வா எடிசன் போன்றோர்கள் கஷ்ரப்பட்டு கல்வி கற்றுத்தான் முன்னோக்கி வந்தவர்கள். ஆரம்பத் தில் நம்மைத் தியாகம் செய்து படித்தால்தான் எதிர்காலத்தில் சந்தோசமாக வாழமுடியும். கல்வி கற்காவிட்டால் கற்றவர்களுக்கு கீழ் அடிமைகளாய் கைகட்டி நிற்க வேண்டிய நிலைமை எமக்கு ஏற்படும். கல்வி என்பது எமது வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். நாம் பிறக்கும் போதே அறிவான குழந்தையாய் பிறப்பதில்லை. இவ்வுலகத்தோடு இணையும் போதுதான் கல்வி என்பது அவசியமாகின்றது. ஆதனால் எம்மை அறிவாளியாய் மாற்றுவதற்காக கல்வி கற்கின்றோம். அன்றாட வாழ்க்கைக்கு உணவு, உடை, உறையுள் எவ்வளவு முக்கியமோ அதுபோல் கல்வியும் மிகவும் அவசியமானது.




கடின முயற்சியோடு நாம் எமது கல்விப் பயணத்தை தொடர்ந்தால் அரசனாகவோ, அரசியாகவோ கௌரவமான வாழ்க்கை வாழலாம். நாம் கல்வியெனும் உணவை உட் கொண்டால் நோய் நொடியின்றி நீண்டகாலம் சுகமாய் வாழலாம். கல்வி கற்பதை இழந்தோமானால் எமது வாழ்க்கை தெருவில் கிடக்கும் குப்பைபோல் ஒன்றுக்கும் உதவாததா கக் காணப்படும். எந்த சூழ்நிலையிலும் கல்வி கற்பதை நிறுத்தக்கூடாது. வாழ்க்கையில் எவ்வளவு இன்னல்கள் வந்தாலும் அதனை ஒரு பக்கம் வைத்துவிட்டு படிப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

படிக்காமல் நாம் இருந்து விட்டு பிறகு யோசிப்பதில் எந்தபயனும் இல்லை. அது முட்டாள் தனமான காரியமாகும். நாம் நன்றாய் கல்வி கற்று "கற்றவர்" பட்டத்தை பெற்று இப்பூமியில் தலை நிமிர்ந்து வாழ்ந்து காட்ட வேண்டும். சமூகத்தில் ஒருவர் உயர்ந்தவராகவும் பணக்காரனாகவும் இருந்தாலும், அவன் படிக்காமல் விட்டால் எந்த பயனும் இல்லாமல் போகும். கடலில் மிதக்கும் படகு கரையை வந்தடைவதற்கு தத்தளிப்பது போலாகிவிடும்.



இவ்வாறு கல்வியின் சிறப்பை இன்னும் அழகாக வர்ணித்துக் கூறலாம். கல்வி கற்றால்தான் மலையின் உச்சியை அடை முடியும். இதனை மறைமுகமாக கூறுகின்றேன். கல்வி ஒன்று மட்டும் எம்மை வாழ்க்கையில் நல்ல நிலையை அடைய வைக்கும்.

**கனவுகள் மெய்ப்பட கல்வி அவசியம்!**

NAAVELI நாவெளி
கல்விப்பாதை
பிரதேச செயலகம் ~ நாவிதன்வெளி - Divisional Secretariat - Navithanveli
புதன்கிழமை 25.09.2024


# கல்விக்கான உலகளாவிய அர்ப்பணிப்பு

இராசநாயகி இருதயராஜா - கல்லடி, மட்டுநகர்.

சர்வதேச எழுத்தறிவு தினம் ஆண்டு தோறும் செப்டம்பர் 8ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. இது தனியாள் மற்றும் சமூக வளர்ச்சியில் எழுத்தறிவின் முக்கிய பங்கை எடுத்துக்காட்டுவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க தினமாகும். 1966ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பால் (யுனெஸ்கோ) இத் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த நாள் அடிப்படைக் கல்வியறிவு மற்றும் பொதுவான கல்விப்புலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஊக்குவிக்கவும் ஆய்வு செய்யவும் கூடிய வகையில் உருவாக்கப்பட்ட ஒரு உலகளாவிய தினமாக அமைகிறது.

சர்வதேச எழுத்தறிவு தினத்தின் முக்கியத்துவம் வெறும் வாசிப்பு மற்றும் எழுதும் திறன்களுக்கு அப்பாற்பட்டது. தனியாள் வலுவூட்டம் மற்றும் சமூக, பொருளாதார முன்னேற்றத்தின் அடிப்படை அம்சமாக எழுத்தறிவு என்ற பரந்த கருத்தை அது உள்ளடக்கியது. தகவல்களை அணுகுவதற்கும் பொருளாதார நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கும் பகுத்தறிவு மிக்க முடிவுகளை எடுப்பதற்கும் கல்வியறிவு அடிப்படையாகும். தனிநபர்கள் தங்கள் சமூக செயற்பாடுகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ளவும் நவீன வாழ்க்கையின் சிக்கல்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளவும் அவர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வு மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு பங்களிக்கவும் கல்வியறிவைப் பெற்றுக்கொள்வது இன்றியமையாததாகின்றது.

உலகளாவிய ரீதியில் முன்னைய கால நிலைவரங்களுடன் ஒப்பிடும் போது கல்வியறிவு விகிதங்களில் முன்னேற்றங்கள் இருக்கின்ற போதிலும் இன்னும் பல சவால்கள் உள்ளன. யுனெஸ்கோவின் கூற்றுப்படி உலகம் முழுவதும் சுமார் 773 மில்லியன் வளர்ந்தவர்கள் மற்றும் 58 மில்லியன் குழந்தைகள் இன்னும் அடிப்படை கல்வியறிவு திறன்களைக் கொண்டவர்களாக இல்லை. இந்த புள்ளி விபரங்கள் குறிப்பாக அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகள் மற்றும் ஒதுக்கப்பட்ட சமூகங்களில் நிலவும் தொடர்ச்சியான கல்வி ஏற்றத்தாழ்வுகளை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. வறுமை பாலின சமத்துவமின்மை மற்றும் போதிய கல்வி உள்கட்டமைப்பு போன்ற காரணிகள் தரமான கல்வி மற்றும் எழுத்தறிவுக்கான அணுகலைத் தொடர்ந்து தடுக்கின்ற காரணிகளாக அமைகின்றன.




சர்வதேச எழுத்தறிவு தினமானது கல்வி பற்றிய விழிப்புணர்வை ஊக்குவித்தல் எழுத்தறிவு முயற்சிகளை ஊக்குவித்தல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் இந்த சவால்களை எதிர்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் கல்வியறிவு மற்றும் கல்வி தொடர்பான சமகால பிரச்சினைகள் மற்றும் முன்னுரிமைகளை பிரதிபலிக்கும் ஒரு குறிப்பிட்ட கருப்பொருள் மூலம் இந்த நாள் அனுஷ்டிக்கப்படுகிறது. உதாரணமாக சமீபத்திய கருப்பொருள்களாக கல்வியறிவில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் தாக்கம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் கல்வியின் பங்கு மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றலின் முக்கியத்துவம் போன்றவற்றைக் கூறலாம். இந்தக் கருப்பொருள்கள் கல்வியறிவு மற்றும் கல்வி முறைகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் விவாதங்கள் மற்றும் செயற்கிரமங்களுக்கு வழிகாட்ட உதவுகின்றன.

சர்வதேச எழுத்தறிவு தினத்தை அனுஷ்டிப்பதற்காக சமூக நிகழ்வுகள் கல்வி பிரச்சாரங்கள் மற்றும் சர்வதேச மாநாடுகள் போன்றன ஒழுங்குபடுத்தப்படுகின்றன. பாடசாலைகள் பல்கலைக் கழகங்கள் நூலகங்கள் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் பெரும்பாலும் கல்வியறிவின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் மற்றும் வெற்றிகரமான கல்வி மேம்பாட்டு திட்டங்களை வெளிப்படுத்தும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதன் மூலம் இந்தத் தினத்தை அனுஷ்டிப்பதில் பங்கேற்கின்றன. இந்த நடவடிக்கைகள் சமூகங்கள் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கல்வி மேம்பாட்டிற்கான பங்குதாரர்கள் கல்வியறிவு முயற்சிகளில் முதலீடு செய்வதற்கும் ஆதரவளிப்பதற்கும் ஊக்கமளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

சர்வதேச எழுத்தறிவு தினத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று கல்வியில் அனைத்து நிலையில் உள்ளவர்களையும் உள்ளடக்குதல் மற்றும் ஒப்புரவை மேம்படுத்துவதாகும். கல்வியறிவு என்பது வறுமை நச்சு வட்டத்தின் சுழற்சியை உடைப்பதற்கும் பெண்கள் குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட ஒதுக்கப்பட்ட மக்கள் குழுமங்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கும் ஒரு சக்திவாய்ந்த கருவியாகும். அனைத்து தனிநபர்களும் தரமான கல்வி மற்றும் எழுத்தறிவு வளங்களை அணுகுவதை உறுதி செய்வதன் மூலம் சமூகங்களிடையே அதிக இணக்கப்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க முடியும்.

தனிப்பட்ட மற்றும் சமூக வளர்ச்சியில் கல்வி அறிவின் பங்கிற்கு மேலதிகமாக ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளின் முன்னேற்றத்திற்கு எழுத்தறிவு அவசியம். கல்வியறிவு பெற்ற தனிநபர்கள் ஜனநாயக செயல்முறைகளில் பங்கேற்கவும் அவர்களின் உரிமைகளுக்காக வாதிடவும் அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் கொள்கைகளை உருவாக்குவதற்கு பங்களிக்கவும் சிறப்பாக தயார்படுத்தப் படுகின்றனர். எனவே எழுத்தறிவு என்பது தனிமனித வளர்ச்சிக்கான பாதை மட்டுமல்ல அடிப்படை மனித உரிமை மற்றும் நிலையான வளர்ச்சியின் முக்கிய அங்கமுமாகும்.

சர்வதேச எழுத்தறிவுதினம் கல்வியறிவின் சமூகங்களையும் தனிநபர்களையும் நிலை மாற்றும் சக்தி மற்றும் கல்வி ஏற்றத் தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கான தற்போதைய நிலையை நினைவூட்டுகிறது. கல்வியறிவு அபிவிருத்தியின் முன்னேற்றத்தைக் கொண்டாடுவதன் மூலமும் எஞ்சியிருக்கும் சவால்களில் கவனம் செலுத்துவதன் மூலமும் ஒவ்வொரு தனிநபரும் தனது வாழ்வை செழிப்படையச் செய்து கொள்வதற்கான திறன்களையும் அறிவையும் பெறுவதற்கான வாய்ப்பை உறுதி செய்வதற்கான எங்கள் உறுதிப்பாட்டை நாங்கள் மீண்டும் இந்த தினத்தில் உறுதிப் படுத்திக்கொள்வோம். இந்த முக்கியமான நாளை நாம் அனுஷ்டிக்கும் போது கல்வியை அனைவரும் அணுகக்கூடிய உலகத்தை உருவாக்குவதற்கான நமது அர்ப்பணிப்பை மீண்டும் புதுப்பிப்போம் இது சமூகங்களிடையே சமத்துவம் மற்றும் வளமான எதிர்காலம் அமைய வழிவகுக்கும்.

# சரியான பாதையில் சென்றால்...

NMM A. Sujan - Colonization Officer



கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

தகவல் மூலம் - டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெசனல் - ஸ்ரீலங்கா

எனினும், நீடித்த யுத்த சூழ்நிலையினால் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைய கடன் தவணையை செலுத்த முடியாது போனமையும், அதனைத் தொடர்ந்து காணியை விற்பனை செய்வதற்கு வங்கி அறிவித்தல் விடுத்தமையும் அவரது நினைவிற்கு வந்தது.

வங்கியில் தாம் பெற்ற கடன் தொகையைவிட, காணியின் பெறுமதி அதிகம் என்பதனால், இடத்தை வாங்குவதற்கு பலர் முன்வந்த போதிலும், அது ஜயபூமி காணியாக இருப்பதனால், பின் வாங்கிச் சென்று விட்டனர். எனினும், நீண்டகால குத்தகைக்கு காணியொன்றினைப் பெற்றிருந்தால், விரும்பிய சந்தர்ப்பத்தில் அந்த உரிமையை வேறொருவருக்கு எழுதிக் கொடுப்பதன் மூலம், தனது பிரச்சினையை இலகுவாக தீர்த்து, கிடைத்த பணத்தில் வேறிடத்தில் சிறிய காணியை வாங்கியிருக்கலாம் என இப்பொழுதே அவருக்குப் புரிகின்றது.

ஆனால், தற்போது வங்கியினால் காணி விற்பனை செய்யப்பட்டு, கடன்கள் அடைக்கப்பட்டதன் பின்னர் எஞ்சியுள்ள பணத்தை பெறுவது மாத்திரமே ஒரேவழியாகும். எனினும், அந்த பணம் கைக்கு வருவதற்கு எத்தனைநாளாகுமோ என்பது குறித்தும் சிவராமன் கவலையடைந்துள்ளார்.

**3.5 நீண்டகால குத்தகை உறுதிப்பத்திரம் யாருக்கு வழங்கப்படும்?**

எந்தவொரு நபரும் அல்லது நிறுவனமும் பெற்றுக்கொள்ள முடியும். ஆதிக வருமானம் பெறுபவர்கள், நடுத்தரவர்க்கத்தினர், அரசாங்க ஊழியர்களுக்கு இந்த குத்தகை உறுதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறே இந்த கலப் பகுதிக்குள் இருக்கும் அரசாங்கத்தின் எந்தவொரு இடத்திற்கும் நீண்டகால குத்தகையே வழங்கப்பட முடியும். இந்த உறுதிப் பத்திரம் வழங்கப்படக் கூடிய தேவைகள்:

* தங்குமிட விடுதிகளுக்கு
* வர்த்தக இடங்களுக்கு
* தொழில் இடங்களுக்கு
* விவசாயத் தொழில் இடங்களுக்கு
* அமைப்பு இடங்களுக்கு
* வேறுநிறுவனங்களுக்கு

**3.6. நீண்டகால குத்தகை தாரர்களை எவ்வாறு அடையாளம் காண்பது?**




**1.** இது அரசாங்கத்திற்கும், குத்தகை பெறுபவருக்கும் இடையிலான உடன்படிக்கையாகும்.

**2.** குத்தகை பெறுபவர் பின்பற்ற வேண்டிய பல நிபந்தனைகள் இதில் உள்ளன.

**3.** வழங்கப்பட வேண்டிய தினம் மற்றும் குத்தகை தொகை என்பன குறிப்பிடப்பட்டிருக்கும்.

**4.** நில அளவையாளரினால் சான்றளிக்கப்பட்ட வரைபடமும், உறுதிப்பத்திரத்துடன், இணைக்கப்பட்டிருக்கும்.

**5.** நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட நில வரைபடத்தில் காணியின் எல்லைகள் மற்றும் அளவு என்பன குறிக்கப்பட்டிருக்கும்.

**6.** பொதுவாக குத்தகை 30 வருட காலப்பகுதிக்கு வழங்கப்படும். (தேவையின் அடிப்படையில் குத்தகைகாலம் வேறுபடுவதுடன், முந்தைய காலத்தின் அடிப்படையில் வருடத்திற்கான குத்தகை இதன்கீழே வழங்கப்படும்).

**7.** இது இரு தரப்பினருக்கு இடையிலான உடன்படிக்கையாக இருப்பதுடன், குத்தகை பெறுபவரின் மற்றும் ஜனாதிபதியின் கையொப்பம் இடப்பட்டிருக்கும். அத்துடன், முதற் பிரதியில் சிவப்பு நிறத்தில் அரசாங்க முத்திரை (Embossed Seal) பதிக்கப்பட்டிருக்கும்.

**8.** இந்த குத்தகை உறுதிபத்திரத்தினை பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தல் வேண்டும். தொடரும்...

# கிராம மக்களின் வாழ்வும் வளமும்

செல்வசிகாமணி (ஓய்வுநிலை அதிபர்)-சென்றல்கேம்ப்






கடந்த மாத இதழின் தொடர்ச்சி...




முன்பெல்லாம் நெற்செய்கையில் விவசாயிகள் விதைப்பது குறைவு. மாறாக நெல்லை நாற்று மேடைகளாகப் பதியம் வைத்து பின்னர் அவற்றைப் பிடுங்கி சேறாக்கப்பட்ட வயல்களில் நடுவதுதான் வழக்கம். வேளாண்மை நாட்டுவதென்பது எல்லா வயதினரா லும் முடியாது. குனிந்து நின்று நீண்ட நேரம் நடவேண்டும் ஆனால் எங்கள் கிராம இளைஞர் யுவதிகளுக்கு வேளாண்மை நடுவதென்பது கை வந்தகலை. சிறப்பாகச் செய்வார்கள். இது அவர்களுக்கு வருமானத்தை ஈட்டித்தரும் தொழிலாகக் காணப் பட்டது. அதன் பின்னர் சில நாட்களால் நெல்வயல்களில் களை பிடுங்குதல் இடம்பெறும். அந்த வேலைகளிலும் எமதுமக்கள் ஈடுபட்டு வருமானத்தைப் பெறுவதுண்டு.

மற்றுமொரு பிரதான வருமானமீட்டும் கூலித்தொழிலாக காணப்பட்டதே நெல் அறுவடை ஆகும். நெல் அறுவடை செய்யும் வயல்களுக்குச் சென்றால் வயல்க்காரர்கள் வேளாண்மைப்பங்கு அளந்து கொடுப்பார்கள். ஒருபங்கு 7/16 கம்புகள் ஆகும். ஒரு கம்பு 6அடி நீளமானதாகும். இப்படியான பங்குகளை இளைஞர்கள் சாதாரணமா க இரண்டு மூன்று பங்கு என தினமும் வெட்டுவார்கள். இதுவும் இளைஞர் களுக்கு வருமானத்தை ஈட்டித்தரும் தொழிலாக காணப்பட்டது. அக்காலத்தில் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களும் அதிகாலையில் சென்று வேளாண்மைப் பங்கு எடுத்து இயன்றளவு வெட்டி விட்டு பாட சாலைக்கு சென்று படித்து விட்டு மீண்டும் பாடசாலை விட்டு வந்து தனது பங்கை வெட்டி முடித்து விடுவார்கள் அவ்வாறு வறுமையான குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்கள் வருமானம் பெற்று தமது கல்விச் செலவை மேற்கொண்டார்கள் என்பதும் பிற்காலத்தில் அவர்கள் கல்வியில் உயர்ந்து விளங்கினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவை மட்டுமல்ல இன்னும் பல தொழில்கள் உள்ளன. நான் முன்பு குறிப்பிட்டது போன்று எமது மக்கள் எல்லோரும் சுறுசுறுப்பானவர்கள் அந்த வகையில் சற்று வயதான தாய் மார்கள் விதவைகள் போனறோர் என்ன செய்வார்களென்றால் எமது நாவிதன்வெளிப் பிரதேசத்தின் எல்லை களிலே சில ஆறுகள் நீரோடைகள் காணப்படுகின்றன. அவற்றின் இரு மருங்கிலும் கிரான், கற்பன் போன்ற புல்லினங்கள் காணப்படுகின்றன. அவற்றை இவர்கள் பிடுங்கிக்கொண்டு வருவார்கள். இந்தத் தாய்க்குலத் தெய்வங்கள் என்ன செய்வார்கள் தெரியுமா? அங்கே நீரோடைகளின் அருகே பொன்னாங்காணி, வள்ளல் கொழுந்து, வல்லாரை போன்றவற்றை யும் பறித்து வருவார்கள். வீட்டுக்கு வந்ததும் புல்லைக் காயவைத்து விட்டு சோறு சமைத்து கறியாக கையில் கொண்டுவந்த இலைக்கறிகளையும் சமைத்து தன் பிள்ளைகளுக்குக் கொடுத்து உண்பார்கள் அந்த வீரத் தாய்மார்கள். கணவன் இல்லை என்றால் என்ன? நான் என் பிள்ளை களைப் பார்ப்பேன் என்ற சுயநம்பிக்கை அவர்களுக்கு. புற்களுக்கு கோழிச் சாயம் போட்டு அழகழகான பாய்கள் பின்னி விற்பார்கள். அவற்றில் கற்பன் பாய்களுக்கு விலை சற்று அதிகம். கிராமங்களில் அதிகமாக விருந்தினரை பாய்போட்டுத்தான் வரவேற்பார்கள்.

திருமணத்திற்கும் மாப்பிள்ளைப்பாய் என்று பாய் அலங்காரமாகப் பின்னு வார்கள். சில சந்தர்ப்பங்களில் காய்ந்த புற்களை சகோதர மக்களான முஸ்லீம் மக்களுக்கும் விற்பனை செய்வதுண்டு. பாய் பின்னுவதில் புகழ் பெற்ற முஸ்லீம் மக்கள் நாவிதன்வெளிப் பிரதேசத்தில் உள்ளனர். 12ஆம் கிராமம், 5ஆம் கிராமம் போன்ற கிராம மக்கள் நன்றாகப் பாய் பின்னுவார்கள். அவர் களிடமும் சிலவேளைகளில் பன்புற் களைக் கொடுத்து பாய் பின்னச் செய்து வாங்குவதுமுண்டு. இங்கு நான் குறிப்பிட்டவற்றில் சிலவிடயங்கள் தற்காலத்தில் மாற்றமடைந்தாலும் ஆரம்பத்தில் இருந்த நடைமுறையைக் குறிப்பிட வேண்டியது அவசியம் என எண்ணுகின்றேன்.



மீண்டும் குடியேற்றக் கிராமமல்லாத அன்னமலை, சொறிக்கல்முனை, நாவிதன்வெளி போன்ற பழம்பெரும் கிராம மக்களின் தொழில்களும் வருமானமும் தொடர்பான தகவல் களோடு சந்திப்போம்.

NAAVELI நாவெலி
நாவெளி
விளையாட்டும் தேகாரோக்கியமும்
பிரதேச செயலகம் ~ நாவிதன்வெளி - Divisional Secretariat - Navithanveli


# கர்ப்பகால குருதிச்சோகையும் (*Anemia in Pregnancy*) அதனை வெற்றி கொள்ளும் வழிமுறைகளும்.

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் - நாவிதன்வெளி.


கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

**குருதிச்சோகை நோயினால் சிசுவிற்கு ஏற்படும் சிக்கல்கள்.**

**1.**முதிராக் குழந்தை.
**2.**மூளை வளர்ச்சி குறைவான குழந்தை
**3.**பிறப்பு நிறை குறைவான குழந்தை.
**4.**கருப்பையில் வளர்ச்சி தடை ஏற்பட்ட குழந்தை.
**5.**பிறப்பின் பின் தொற்றுக்குள்ளாதல்.
**6.**பேற்றன்மைக்கால சிசு மரணம்.

**கர்ப்பகாலத்தின் போது குருதிச்சோகை நோய் ஏற்படாமல் தடுக்கும் வழிமுறைகள்.**

**1.** இளவயது கர்ப்பத்தை தவிர்த்தல். **(19** வயதுக்கு குறைந்த**)**
**2.** கர்ப்பத்திற்கு முன்னரான பராமரிப்பை பெற்றுக்கொள்ளல். **(Preconception care)**
**3.** பொருத்தமான குடும்பதிட்டமிடல் முறையைப் பாவிப்பதன் மூலம் குழந்தைகளுக்கு இடையில் போதிய ளவு இடைவெளியை பேணுதல் **(**குறைந்தது **2** வருடங்கள்**).**
**4.** குடல் புழுத்தொற்று காணப்படின் அதற்கான சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் குடல்புழுத் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான முறைகளைப் பேணுதல் (பாதணிஅணிதல், கை கழுவுதல், சுத்தமான கழிவறையைப் பயன்படுத்தல்)
**5.** மூல இறக்க வியாதி அல்லது குதவிரிநாளம் இருப்பின் அதற்கான சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளுவதன் மூலம் இரத்தம் இழக்கப்படுவதனைத் தடுத்தல்.
**6.** சரியான உணவுப் பழக்கவழக்கம், சமைக்கும் முறைபற்றி அறிந்து கொள்ளல்.
**7.** இரும்பு ஊட்டச்சத்து நிறைந் உணவு வகைகளை தினமும் உட்கொள்ளுதல். விலங்குணவுகளான இறைச்சி, மீன் (முட்டையில் காணப்படும் இரும்புச்சத்து அகத்துறுஞ்சப்படும் வீதம் மிகவும் குறைவாகும்)தாவர உணவுகளான கடலை, பருப்பு, தானியங்கள் போன்றவற்றை நீரில் ஊற வைத்து சமைப்பதன் மூலம் அதன் அகத்துறுஞ்சல் வீதத்தை அதிகரிக்கலாம். இரும்புச்சத்து




அகத்துறுஞ்சப் படுவதற்கு விற்றமின்-C அவசியம் ஆதலால் விற்றமின்-C அடங்கிய எலுமிச்சம்பழம், தக்காளிப் பழம், மற்றும் ஏனைய பழங்களை மேற்குறிப்பிட்ட உணவு வகைகளுடன் சேர்த்து உள்ளெடுத்தல். மற்றும் யோக்கட் போன்றவற்றை சாப்பாட்டிற்கு பின் உட்கொள்வதன் மூலமும் அகத்துறுஞ்சலை அதிகரிக்கலாம். பச்சை இலைக்கறி வகைகளை சமைத்த பின்னர் ஆறவிட்டு எலுமிச்சைச்சாறு சேர்த்து உட்கொள்ளல் வேண்டும். மேலும் இரும்புச்சத்து அகத்துறுஞ்சப் படுதலை தடுக்கும் செயற்பாடுகளில் இருந்து விடுபடல் அதாவது பிளேன் டீ, கோப்பி (பொலிபீனோல்) போன்றவற்றினை உணவு உட்கொள்வதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் உள்ள காலப்பகுதியிலும் உணவு உட்கொண்டதன் பின்னர் உள்ள ஒரு மணித்தியால காலப் பகுதிக்குள்ளும் பருகுவதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும்.

முழுத் தானியங்கள், பருப்பு வகைகள், கொட்டைகள் மற்றும் விதைகளில் காணப்படும் பைற்றேற் போன்ற பதார்த்தம் இரும்புச்சத்து அகத்துறுஞ்சலைத் தடுக்கின்றன. பொன்னாங்காணி மற்றும் சொக்கலேட் போன்றவற்றில் காணப்படும் ஒக்சலேற் மற்றும் பாலுற்பத்திப் பொருட்களில் காணப்படும் உயர் கல்சியம் போன்றவையும் மற்றும் நெஞ்செரிவு நோய்க்கு குடிக்கும் அமிலத்தை நடுநிலையாக்கும் **Antacids** போன்றவையும் இரும்புச்சத்து அகத்துறுஞ்சலைப் பாதிக்கும் என்பதனை கருத்திற் கொள்ள வேண்டும். மேலும் முட்டை,பால் போன்றவற்றை இடையுணவாக சேர்த்துக் கொள்வதன் மூலம் **Vit-B12** இனை பெற்றுக் கொள்ள முடியும் என்பதனையும் தானியங்கள், பச்சை இலக்கறி வகைகள் மற்றும் பழங்களை உண்பதன் மூலம் போலேற் விற்றமினையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனையும் விளங்கிக் கொள்ள வேண்டும். இதன் மூலம் உங்களது உணவுத் தட்டினையும் உணவு வேளையையும் சரியாகத் திட்டமிட்டு சரியான உணவுப் பழக்க வழக்கத்தினை பின்பற்றுவது மிகவும் இன்றியமையாததாகும் இதற்கு உங்களது குடும்ப நல சேவை உத்தியோகத்தரினது ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொள்ள தவறாதீர்கள்.

**8.**தாய்மாருக்கான கிளினிக்குகளில் வழங்கப்படும் நுண்போசனை இரும்புச்சத்து மாத்திரைகளை பரிந்துரைக்கும் அளவிற்கேற்ப தவறாது விழுங்குதல்.

இம் மாத்திரைகளை காலையில் வெறும் வயிற்றில் உட்கொண்டால் கூடுதலான அகத்துறுஞ்சல் ஏற்படும் ஆனால் வயிறு குமட்டுதல், வாந்தி போன்ற பக்க விளைவுகள் ஏற்படலாம். எனவே உணவு உட்கொள்ள இரண்டு மணித்தியாலயத்திற்கு முன்னர் உட்கொள்ள வேண்டும். மேற்குறிப்பிட்ட அறிவுரைகளை பின்பற்றி நடப்பதன் மூலம் தாயிலும் சிசுவிலும் ஏற்படும் பாதிப்புக்கள், நோய்கள், மற்றும் மரணத்திலிருந்து தவிர்ந்து ஆரோக்கியமான கர்ப்பத்தை தொடர்வதன் மூலம் ஆரோக்கியமான, பொருளாதாரத்தில் முன்னேறிய சமுதாயத்தை கட்டியெழுப்ப உதவுமாறு வேண்டி நிற்கின்றோம்.



# பாலாடைக்கட்டி மற்றும் காய்கறி ஆம்லெட்

## 2 நபர்களுக்குப் பரிமாறக்கூடிய அளவு

**தயாரிக்கும் நேரம்:** 10 நிமிடங்கள்
**சமைக்கும் நேரம்:** 30 நிமிடங்கள்

### தேவையானப் பொருட்கள்:

* 1/4 கோப்பை பசலிக் கீரை (உறைந்த காய்கறிகள் அல்லது உங்களுக்கு பிடித்தமான காய்கறிகளையும் மாற்றாகப் பயன்படுத்தலாம்).
* 4 முட்டைகள்.
* 1 தக்காளி.
* ¾ கோப்பை (65 கிராம்) துருவப்பட்ட பாலாடைக்கட்டி.
* 1 வெள்ளை ப்பூண்டு, சிறியதாக நறுக்கியது.
* 1/2 நறுக்கிய வெங்காயம்.
* 1 மேசை க்கரண் டி எண்ணெ ய்.
* 1/2 கோப்பை (125 ml ) குறைந்த கொழுப்புள்ள பால் அல்லது கால்சியம் நிறைந்த சோயா பால்.
* சுவைக்கு மிளகு.

### செய்யும் முறை :

1. ஒரு கிண்ணத்தில் சிறிய குமிழிகள் தோன்றும் வரை முட்டைகள் மற்றும் மிளகைச் சேர்த்து அடிக்கவும். காய்கறிகள், தக்காளிகள், பாலாடைக்கட்டி, பூண்டு, வெங்காயம், பால் மற்றும் மிளகை முட்டைகளுடன் சேர்க்க வும். அனைத்தையும் நன்றாக் கலக்கவும்.

2. 20 cm நான்-ஸ்டிக் பேனில் (non-stick pan) 1தேக்கரண்டி எண்ணெயைச் சூடாக்கவும்.

3. முட்டை - பால் கலவையை அதில் ஊற்றவும்.

4. வெப்பத்தைக் குறைக்கவும். மூடி வைத்து 20-25 நிமிடங்களுக்கு அல்லது கெட்டியாகும் வரை சமைக்கவும்.

புரதம்
கல்சியம் ★★★★

# பெண் தொழில் முயற்சியாளர்களும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும்

எஸ்.எல். பாத்திமா சிபாயா - பிரதேச செயலகம் - காரைதீவு



உலகளாவிய ரீதியில் இன்று பேசப்படுகின்ற ஒரு முக்கியமான விடயம் பெண் தொழில் முயற்சியாளர்கள் அல்லது தொழில் முனைவோர் பற்றிய கருப்பொருள் ஆகும். பெண் தொழில் முயற்சியாளர் என்பவர் "ஒரு வியாபாரத்தை அல்லது ஒரு நிறுவனத்தை ஒழுங்கமைத்து நடத்துகின்ற தனியான ஒரு பெண் அல்லது பெண்கள் குழுவினர்" **(Gunapathy.S, Mayilsamy.C. 2013)** அவர்கள். மற்றுமொரு விளக்கத்தின் பிரகாரம் பெண் தொழில் முயற்சியாளர் என்பது "பால்நிலை சவால்களுக்கு மத்தியில் வணிக வாய்ப்புக்களை அடையாளம் கண்டு உருவாக்கி, நிர்வகிக்கும் ஒருவரைக் குறித்து நிற்கின்றது. பொருளாதார வளர்ச்சியில் நாட்டுக்கு வருமானமீட்டும் துறைகளில் இன்று பெண்களின் முயற்சியும் பங்களிப்பும் பலதரப்பட்ட வகைகளில் வியாபித்து காணப்படுகின்றன. ஆண்களுக்கு சமமாக அனைத்து தொழில்களிலும் பங்களிப்பு செய்கின்றனர். சமீபத்திய காலங்களில் பெண் தொழில் முயற்சியாளர்களின் திறன் மற்றும் அவர்களின் பங்களிப்புக்களின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளன. இதனால் அவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் அரசாங்கமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் வியாபாரம் மற்றும் தொழில் துறைகளில் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான கொள்கைகளை உருவாக்கி அவற்றை நடைமுறைப்படுத்துகின்றன. இதன் மூலம் தனிப்பட்ட பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு பயன் அளிப்பது மட்டுமின்றி நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கான பரந்த இலக்கிற்கும் பங்களிப்புச் செய்கின்றது. உலகளாவிய தொழில் முயற்சியாளர் கண்காணிப்பு ஆராய்ச்சி திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள **59** பொருளாதாரங்களில் மொத்தப் பெண்களில் **1.5% - 45.4%** வீதம் வரையான பெண் தொழில் முயற்சியாளர்கள் உள்ளனர். இன்று வளர்ந்து வரும் பல பொருளாதாரங்களில் ஆண்களை காட்டிலும் பெண்களே மிக வேகமாக வணிகங்களை ஆரம்பித்து வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை செய்து வருகின்றனர். பெண் தொழில் முயற்சியாளர்களின் பங்களிப்பானது நாடுகளின் வருமானத்துக்கு ஏற்ப காணப்படுகின்றது. சிறிய அளவு வருமானம் கொண்ட நாடுகளில் நான்கில் ஒரு வணிகத்தில் மட்டுமே பெண் தொழில் முயற்சியாளர் காணப்படுகின்றனர். நடுத்தர மற்றும் அதிக வருமானம் கொண்ட நாடுகளில் விகிதங்கள் முறையே **36** வீதம் மற்றும் **37** வீதம் அளவில் காணப்படுகின்றனர். **(Reenaet al.2023)** இலங்கையை எடுத்து நோக்குகின்ற போது நாட்டின் மொத்த சனத்தொகையில் **51.9%** ஆனோர் பெண்களாகக் காணப்படுகின்றனர். இலங்கைக்கு வருமானமீட்டிக் கொடுக்கின்ற முக்கிய மூன்று துறைகளான தேயிலைத் தோட்டம், ஆடைத் தொழிற்சாலை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு போன்ற துறைகளிலே பெண்களின் பங்களிப்பே முதன்மையானதாகவும் முக்கியமானதாகவும் காணப்படுகின்றது. கடந்த காலங்களிலே ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களின் பின்னர் பெரும்பாலான பெண்கள் தனித்து விடப்பட்டனர். கணவன் இறந்தமை, கணவனால் கைவிடப்பட்டமை, விவாகரத்து நிலை, குடும்பங்களின் வருமானமீட்டும் ஆண்களின் இழப்பு மற்றும் விஷேட தேவையுடையோர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு போன்ற பல்வேறு காரணங்களினால் குடும்பங்களின் வருமானம் குறைந்து வறுமை நிலை அதிகரித்தது. இதனால் பெண்கள் குடும்பங்களின் வருமானமீட்டும் தொழில் முயற்சிகளில் ஈடுபட வேண்டிய தேவை ஏற்பட்டது.

**Salfiya.M.A.C.(2015).** ஆதலால் இலங்கையில் பெண் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம்; **NEDA, SED, HRDO, Women and Child Affairs** போன்ற திணைக்களங்கள் ஊடாக சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில் முயற்சிக்கான கடனுதவிகள், மானியங்கள் மற்றும் தொழில் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. அவ்வாறே **JICA, CHRYSHALISH** போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களும் பெண் தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்துவதற்காக பல திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றன. மேலும் அமைச்சர் அனுப பஸ்குவல் சுயதொழில் செய்பவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என அறிவித்திருந்தார் **(19.04.2024 - Short News TV** தொழில் முயற்சி செயற்பாடுகள் மூலமாக பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது அவசியமான ஒன்றாகும். இதன் பொருட்டு அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் அதிகளவாக பெண்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சிகளை முன்வைக்கின்றன.

எது எவ்வாறு இருந்த போதிலும் அரசும் அரசு, சாரா அமைப்புகளும் பெண் தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்துவதற்காக பல்வேறுபட்ட செயற்திட்டங்களை செயற்படுத்தினாலும் பெண் தொழில் முயற்சியாளர்களிடையே முன்னேற்றம் என்பது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. காரணம் அவர்கள் வெற்றிகரமான வணிகங்களை நிறுவுவதற்கும் வளர்ப்பதற்கும் தங்கள் பயணத்தில் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்கின்றனர். பாலின சமத்துவத்தை நோக்கி குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் இருந்த போதிலும், ஏற்றத்தாழ்வுகள் நீடிக்கின்றன. நிதி, வலையமைப்புக்கள் மற்றும் வாய்ப்புக்களுக்கான அணுகுமுறை பாதிக்கப்படுகின்றன. இந்த சவால்கள் பெண் தொழில் முயற்சியாளர்களை தொழில் முனைவில் பின்னடைவை நோக்கி நகர்த்துகின்றன. குறிப்பாக நாம் நோக்கும் போது,

**1.** ஒப்பீட்டளவில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் குறைந்தளவான நிதியைக் கொண்டிருத்தல் மற்றும் மூலதனத்தை அணுகுவதிலுள்ள குறைபாடுகள் என்பன முதன்மையான சவாலாகக் காணப்படுகின்றது.

**2.** பெண் தொழில் முயற்சியாளர்கள் எதிர் நோக்கும் மற்றொரு சவால் முறையான வழிகாட்டுதல்கள் மற்றும் இடைத்தொடர்பாடல்கள் குறைவாகக் காணப்படுவதாகும்.

**3.** தொழில் மற்றும் குடும்பப் பொறுப்புகளை சமநிலைப்படுத்துவது பெண் தொழில் முயற்சியாளருக்கு மற்றொரு குறிப்பிடத்தக்க தடையாக உள்ளது.

**4.**சமூகத்தின் தவறான கண்ணோட்டம் மற்றும் குடும்ப அங்கீகாரமின்மை என்பன ஒரு பெண் தொழில் முயற்சியாளரினால் எதிர் கொள்ளப்படும் பாரிய சவாலாகும்.

**5.** முறையான பயிற்சிகளினைப் பெற்றுக் கொள்ளாமை ஒரு சவாலாகக் காணப்படுகின்றது.

**6.** பாலியல் மற்றும் பால்நிலைசார் அச்சுறுத்தல்கள் தோற்றுவிக்கப்படல்.

**7.** வணிகம்/ வியாபாரம் குறித்து சட்ட ரீதியாக பதிவு செய்யப்படாமை.

போன்ற பல்வேறுபட்ட சவால்களை பெண் தொழில் முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் அதேவேளையில், நிதிகளைப் பெற்றுக் கொள்ள நிறுவனங்களை அணுகுதல், வழிகாட்டுதல்களை தேடிப்பெறல், தொழில் மற்றும் குடும்பத்தை சமநிலைப் படுத்துவதற்காக பணிகளைப் பகிர்ந்து கொள்ளல், சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல், பாலியல் மற்றும் பால்நிலை சார் அடிப்படை அறிவை வழங்குதல் மற்றும் வணிகம் சார்ந்த சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இந்த சவால்களை முறியடித்து பெண் தொழில் முயற்சியாளர்களது முழுத் திறனையும் பயன்படுத்தி நாட்டின் வருமானத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் புதுமைகளைக் கொண்டு வர முடியும்.




**01.** பொன்மேனி தரும் குப்பைமேனி. குப்பைமேனி இலையையும், உப்பையும், மஞ்சளையும் சேர்த்து அரைத்து சொறி சிரங்குகளுக்கு தேய்த்து வர குணமாகும்.

**02.** வயிற்றுவலி போக்கும் நறுவிலி. நறுவிலிபட்டையை இடித்து சாறு பிளிந்து தேங்காய்பாலில் கலந்து குடிக்க குணமாகும்.

**03.** தலைபாரம் நீக்கும் கிராம்பு. கிராம்பை நீர் விட்டு மை போல அரைத்து நெற்றியிலும், மூக்கின் மீதும் பற்றிட தலைபாரம் நீங்கும்.

**04.** காயத்துக்கு காட்டாமணக்கு. காயப்பட்டு இரத்தம் வெளிப்பட்ட இடத்தில் காட்டாமணக்கு பாலைப் பூசிட குருதி நிற்கும், காயமும் ஆறும்.

**05.** கடலையும் அடிதடியும். கடலை இலையை வேக வைத்து அடிபட்ட வீக்கம், மூட்டுப்பிசகல் முதலியவைகளுக்கு சூட்டோடு வைத்து கட்ட தீரும்.

**06.** புளியிருக்க புண்ணேது. புளிய இலை, வேப்பை இலை இரண்டும் சம அளவு எடுத்து இடித்து எட்டு பங்கு நீர் விட்டு காய்ச்சி புண்களை கழுவிவர புண்கள் ஆறும்.

**07.** பசி உண்டாக. புதினா சாறு 1பங்கு எலுமிச்சம் சாறு 3 பங்கு கூட்டி கொஞ்சம் சர்க்கரை சேர்த்தால் பசி உண்டாகும்.

**09.** கைநடுக்கம் தீர. தூதுவளையை மை போல அரைத்து சுண்டைக்காய் அளவு காலை, மாலை பசும்பாலில் 15நாள் சாப்பிட்டால் தீரும்.

**10.** குடல்புண் தீர மஞ்சளை தணலில் இட்டு சாம்பலாக்கி தேன் கலந்து சாப்பிட குடல் புண் ஆறும்

# சித்தர்கள் அறிவியல், மருத்துவத்தில் செய்த பங்களிப்புகள்

கி.யோகலிங்கம் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்





சித்தர்கள் என்போர் பண்டைய தமிழகத்தின் அறிவியலாளர்கள் ஆவர். அவர்கள் ஆன்மீக வாதிகளோ, சாமியார்களோ அல்லர் அவர்கள் விஞ்ஞானிகள் ஆவர். (Scientists) அவர்கள் வானியல், மருத்துவம், வேதியியல் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி செய்தனர் 96 உடல் தத்துவங்களை பிரித்து மனித உடல் கூறியலை (Human Anatomy) ஆராய்ந்தனர் நோயியல் (Pathology) துறையில் மிக ஆழமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர் மனிதர்களுக்கு ஏற்படும் நோய்கள் 4448 என்று வரையறுத்தனர் இது நோயியல் துறையில் அவர்களின் ஆழமான ஆராய்ச்சி அறிவைக் காட்டுகின்றது.

மூச்சுறுப்புகளில் ஏற்படும் நோய்களை கப நோய்கள் எனவும், மற்றவற்றை வாத நோய்கள் எனவும் வகைப் படுத்தினர் மருந்தியல் (Pharmacology) பற்றி விரிவான ஆய்வு செய்து அதன் பயனாக கண்டு பிடித்த மருந்துகளை 32 வகை உள் மருந்துகள் 32 வகை வெளி மருந்துகள் என வகைப்படுத்தினர் மருத்துவத்துறையில் ஏராளமான நூல்களை படைத்துள்ளனர்.

நரம்பியலை ஆராய்ந்து வர்ம மருத்துவத்தைக் கண்டு பிடித்தனர் இந்த வர்ம மருத்துவம் சித்தர்கள் கண்டு பிடித்தநரம்பியல் மருத்துவம் (Neurological Medicine) ஆகும். வேதியியல் துறையில் அழமான விரிவான ஆய்வுகளைசெய்தனர். செயற்கையாக வேதிப்பொருள்களில் தாதுக்களை தயாரிக்கும் முறைகளை கண்டுபிடித்தனர். அதற்கு வைப்பு முறை என்று பெயரிட்டனர் சித்தர்கள் எழுதிய வாத நூல்கள் அனைத்தும் வேதியியல் துறையில் அவர்களின் அழமான ஆராச்சியை வெளிப்படுத்துகின்றன.

விண் பொறியியல் துறையில் போகர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டதன் பயனாக பஞ்ச பூதத்தால் செய்த ஆகாயப்புரவி என்ற விமானத்தை கண்டு பிடித்து சீனாவுக்கு பயணம் செய்திருக்கின்றார்கள் ஆகாயப்புரவி என்ற விமானம் பற்றிய குறிப்புக்களை போகர் ஏழாயிரம் என்ற நூலில் காணமுடிகின்றது.

உடல், மனம், அறிவு வளர்ச்சிக்குப் பயன்படும் வகையில் யோக ஆய்வுகளைச் செய்து யோக நூல்களை படைத்தனர் மெய்யியல் என்னும் தத்துவத்துறைகளிலும் ஆய்வுகளைச் செய்தனர். தமது தத்துவ ஆய்வுச் சிந்தனைகளை ஞான நூல்களாக படைத்தனர் மொத்தத்தில் சித்தர்கள் பலதுறை வல்லுனர்களாக விளங்கினர். சித்த மருந்தியலையும், சித்த வேதியலாகிய வாதத்தையும் நவீன வேதியியல் பகுப்பாய்விற்கு உட்படுத்தி ஆராய்வதன் மூலம் அறிவியல் உலகிற்கு புதிய வெளிச்சத்தை தரமுடியும். உலக அறிவியல் வரலாற்றில் சித்தர்களை அறிவியலாளர்களாகவும், மருந்தியலாளர்களாகவும் முன்னிலைப் படுத்த வேண்டியது எமது கடமை ஆகும்.



## மாதர் தம்மை இழிவு செய்யும்

முத்திரை பதித்தொரு
முத்தான வரிகளினால்
மூத்த தமிழ்க் கவி படைத்த
பாரதியை மறந்து விட்டோம்
சாதி மத பேதமில்லா
சரித்திரத்தை ஆக்கிடுவோம்
மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையினைக் கொளுத்திடுவோம்...

ஆதி சக்தி ஆனவளாய்
சாதிக்கப் பிறந்தவளாய் - ஆண்
ஆதிக்க மரபுடைத்து
ஆசு கவி அவன் படைத்தான்
போதிக்கும் மனிதர்களின்
போலி முக மூடிகளை
வேருக்குள் வெளிச்சத்தைப்
பாய்ச்சி அவன் தளையறுத்து
உலக மகா சக்தியெனும்
உண்மையினை உணர வைத்து
வலமிடமாய் உறுதி பெற்ற
வாழ்க்கையினை வாழுகின்றோம்

அடிமைகளாய் யாருமில்லை,
அதிகாரம் எங்குமில்லை
விடியல்களைத் தரும் அன்னை
விட்டில்களாய் ஆவதில்லை
அன்பினால் உலகை ஆள்வாள்
அன்னையென்று அறிந்த பின்பும்
வன் கொடுமை வழக்குரைக்கும்
வாய்ப்பதொரு அதிசயந்தான்!
துன்பங்களின் துயர் துடைத்து
தோள் கொடுக்கும் தோழியவள்
இன்புற்று வாழத் தெரியாத
ஆணினம் தான் !

நீதிக்கு பேர் போன தேவதையும்
என்னினம் தான் - நீயும்
சாதிக்கப் பிறந்தவளே!
சோதனைச் சாக்கடையும்
உன் படியென் கொள்,
அநீதியை வேரோடு நீ அறுத்து
கண்ணியமாய் நீ நடப்பாய்
பெண்ணியம் போற்றிடும் - புதுமைப்
பெண்ணாய்ப் புதுப் பிறப்பெடுப்பாய்
வேருன்றி விழுது பரப்பி
வென்றெடுப்போம் பூமிதனை

நாற் குணமும் நாற் திசையில்
தெறித் தோடச் செய்து விடு
ஏழ் பருவம் நீ கொண்ட
பெருமைதனை உரைத்து விடு
ஆக்குவது நீயென்றால் - தீயதை
அழிப்பவளும் நீயன்றோ...!
எழுந்து வா என்னினமே ...!
மாதர் தமை இழிவு செய்யும்
மடமையினைக் கொழுத்திடுவோம்

அண்ணாத்துரை அகல்யா
பிரதேச செயலகம்
காரைதீவு.



## வண்ண மழை

வண்டொன்று வரமாய் வந்து
மண் வாசம் தந்து
வானவில்லாய் வானில் தோன்றும்
வண்ணப் பூவாம் இவள்

கங்கையின் சிட்டுக்குருவிகள்
காற்றாகி மேகம் சேர
ஆகாய கங்கையாய்
பூமியை தாவும் பூ இவள்

மழலைகள் அறிந்து கொள்ள
மங்கையர்கள் அள்ளி கொள்ள
ஆடவர்கள் ஆசி கொள்ள
விவசாயம் காக்கும் விந்தை மழை.

சாரலாய் சந்தம் பாடுவாள்
தூறலாய் துள்ளி ஓடுவாள்
ஆழகழகாய் ஆட்டம் போடும்
வண்ண மழையாம் இவள்

ச.விவீதா
பிரதேச செயலகம்
நாவிதன்வெளி.

## මම දැක්ක ඇය

නාවිදන්වෙලියට පායා ආ සඳවතිය
හිතවතිය ඇයයි
නීතිරීතියට ගරු කර වෙලාවට වැඩ කිරිමට
සැමවිටම කියන්නේ ඇයයි
සිංහල දෙමළ මුස්ලිම් අයගේ ගැටළු
භේදයෙන් තොරව විසඳුවේ ඇයයි
නිලදරුවන් වූ අපට මවක් විය
සහෝදරියක් විය ගුරුවරියක් ද වූයේ ඇයයි
ඇය අභියසදී අප සිනාසෙනවිට සිනාවීමටත්
සංවේදී විටදී කඳුලක් එක්කරන්නත්
මානුෂික වූයේ ඇයයි
තිළිණ කල මල් මිටත් තිළිණ කල ගල් මිටත්
සම සිතින් සම මෙතින්
පිළිගත්තේ ඇයයි
නාවිදන්වෙලියට '' නාවෙළිය '' ගෙන ඇවිත්
සැඟව තිබූ අප දස්කම්
ඉදිරියට ගෙන ආවේ ඇයයි
ඇයයි අප නායිකාව
රාහුලනායකි නම් වූයේ ඇයයි

M.W.W.DISSANAYAKA



## பூனைக் குட்டி

கண் சிமிட்டி
கொஞ்சம் நகர்ந்து
'மியாவ்'
குரூரத்தின் ரகசியம்
ஓர் குட்டி எலிக்காக
காத்திருக்கிறது

வசிக்கும்
இடம் தெரியவில்லை
நகர்வலம்
காண்பது அரிது
நள்ளிரவில்
ஒலமிடும்
கண்களும் விழித்து
விடும்
அமானுஷ்யம் என்றே

திகட்டான பார்வை
நெருங்கும் வரை

திருடி விட நின்று
முறைத்து விட்டுப்
போகும்
"மியாவ்" கத்தி விட்டு
திரும்பிப் பார்த்துச்
செல்லும்

காலடிகளின்
தடயம் இல்லை
'மியாவ்'
குரல் பதிவு
இருக்கிறேன்
என்பதை உணர்த்தி
விட்டுப் போகிறது.....

யோகராசா கவிதா
அன்னமலை

# நாவிதன்வெளி பிரதேசத்தின் பல்துறை கிராமியக் கலைஞர் தம்பியப்பா அருட்பிரகாசம்

ஏ.எல்.எம்.ஷினாஸ், கே.நீலேந்திரன்



அம்பாறை மாவட்டத்தின் மத்திய முகாம்-05 கிராமத்தில் வாழ்ந்து வருகின்ற பல்துறைசார்ந்த சிரேஷ்ட கலைஞர் தம்பியப்பா அருட்பிரகாசம் அவர்களை அண்மையில் நாவெளி மின்னிதழுக்காக அவரது இல்லத்தில் சந்திக்க கிடைத்தது. தம்பியப்பா அருட்பிரகாசம், துறைநீலாவணையை சேர்ந்த தம்பியப்பா, அழகம்மா தம்பதியினருக்கு 1959ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆந் திகதி மகனாகப் பிறந்தார். இவருக்கு தற்போது வயது 65 ஆகின்றது. இவர் பரம்பரை பரம்பரையாக கலைகளை பயின்றுள்ளார். பாடசாலை மாணவராக கல்வி கற்கும் போதே கலைத்துறையில் கவனம் செலுத்தி தனது திறமைகளை வெளிக்காட்டியுள்ளார். இவரது திறமையினை கண்ட அவரது குருவாகிய தாய்மாமன் வைரமுத்து முருகப்பன் இவருக்கு கூத்து, நாடகம், பாடல், நாட்டியம் போன்ற துறைகளிலே பயிற்சியினை வழங்கி அவரை கலைத்துறைக்குள் உள்நுழைய வைத்தார். கலைத்துறையில் இருந்த ஆர்வம் காரணமாக தனது பாடசாலை கல்வியினை தரம் 09 உடன் இடை நிறுத்தி விட்டு கலை பயணத்தினை தொடர்ந்தார்.

பின்னர் துறைநீலாவணை கிராமத்தினை சேர்ந்த அண்ணாவியாரான மறைந்த கலைஞர் தம்பியப்பா அவர்களிம் சென்று முறைப்படி வசந்தன் கூத்து மற்றும் நாடகம், நாட்டியம், கரகாட்டம், மேளவாத்தியம் இசைத்தல், கூத்துக்களின் போது பாடல்களைப் பாடுதல் போன்வற்றை கற்று பல அரங்குகளில் கிராமிய பாடல்களைப் பாடியும் மேளவாத்திய இசையினை வழங்கியும் பல அரங்கேற்றங்களை செய்து அதன் மூலம் மக்கள் மத்தியில் பிரபலமானவராகக் காணப்பட்டார்.

இவரது பிரதான தொழில் விவசாய மாகும். அதன் மூலம் வரும் வருமானத் தினைக் கொண்டு குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்து வந்தார். பின்னர் அவரது தாய்மாமாவின் மகளாகிய முருகப்பன் அஞ்சலா தேவியினை தனது 20 வயதிலே 1979ஆம் ஆண்டு ஏப்ரல் 09ஆந் திகதியன்று திருமணம் செய்து கொண்டார். இவருக்கு 04 பெண் பிள்ளைகளும் ஒரு மகனும் உண்டு.

அன்றைய காலத்தில் தனது குருமார் களுடன் சேர்ந்து இலங்கையில் பல்வேறு இடங்களுக்கும் சென்று வசந்தன் கூத்துகளை ஆடியும் பாடல்களையும் பாடியுள்ளார். எனினும் நாட்டில் 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வாழ்ந்த காரணத்தினால் தனது கலைத்துறை பயணம் பாதிக்கப்பட்டு தான் பயன்படுத்தி வந்த பாரம்பரிய இசைக் கருவிகள் அழிவடைந்த வரலாற்றை இன்றும் நினைவு படுத்தி கூறினார். தற்போது பதிய கருவிகளையே பயன்படுத்தி வருகிறார்.

நாட்டில் ஏற்பட்ட யுத்த நிலைமை ஓரளவு சீரானதும் தனது கலைப் பயணத்தினை மீண்டும் அம்பாறை, மட்டக்களப்பு போன்ற தூர இடங்களுக்கு சென்று மேற்கொண்டதையும் இதில் குறிப்பாக கொழும்பு தெகிவளையில் 2012ஆம் ஆண்டு நடைபெற்ற கூத்துப் போட்டியில் தனது குழுவினர் கலந்து கொண்டு இரண்டாம் இடத்தினை பெற்றதையும் பெருமையுடன் நினைவு படுத்துகிறார். தற்போது மத்தியமுகாம் - 06 படகல் பத்தினி அம்மன் ஆலய வருடாந்த உற்சவ திருவிழாவின் போது அம்மன் தாலாட்டு, அம்மன் காவியம் பாடுதல் மற்றும் மத்திய முகாம்-05 சித்தி விநாயகர் ஆலயத்தில் திருவாசகம் ஓதுதல், மத்தளம் இசைத்தலுடன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் போன்றவர்களுக்கு வசந்தன் கூத்து, மத்தளம் இசைத்தல் போன்ற கலைகளை அண்ணாவியாராக இருந்து பயிற்றுவித்து வருகின்றார்.

இவர் சுமார் 18இற்கு மேற்பட்ட நாடகங்கள் நடித்து இருப்பதோடு 50இற்கும் மேற்பட்ட வசந்தன் கூத்துக்கள் ஆடி பல கிராமங்களில் அரங்கேற்றங்களையும் செய்துள்ளார். நாவிதன்வெளி பிரதேசத்திலுள்ள ஆலயங்களில் கூத்துக்களை ஆடியும் அம்மன் காவியங்களைப் பாடியும் தனது கலைத்திறமையினை மக்களுக் கு வெளிக்காட்டி பல இளங்கலைஞர்க ளையும் இப்பிரதேசத்தில் உருவாக்கி உள்ளார்.

நாவிதன்வெளி இராணைமடு இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் கலை, இலக்கியத்துறைக்கு நீண்ட காலமாக சேவையாற்றி வருகின்ற போதிலும், தனக்கு பின்னர் பரம்பரை ரீதியாக குடும்ப வாரிசாக இக் கலைத் துறையை முன்கொண்டு செல்வதற்கு யாரும் முன்வராமல் இருப்பது தனக்கு பெரும் கவலையை ஏற்படுத்துவதாகவும் சுட்டிக்காட்டுகிறார்.

இவரது கலைத்திறமையினை பாராட்டி பிரதேசத்திலுள்ள ஆலயங்கள் இவருக்கு விருதுகள், சான்றிதழ்கள் வழங்கி பாராட்டி கௌரவித்துள்ளன. தற்போதைய நவீன சினிமா மோகத் தினால் மக்கள் கூத்துக்களை முக்கியத் துவப்படுத்தி ரசிக்க ஆர்வம் காட்டாத காரணத்தினால் நடிப்புத்துறையினை தவிர்த்து கிராமிய பாடல்களை பாடியும், மேளவாத்தியம் இசைத்தும் தனது கலைத்துறை பணியினை முன்னெடுத்து வருவதுடன் இளந்தலை முறையினருக்கும் கலைகளை நெறிப் படுத்தி போதித்து வருகின்றார்.

இவரது கலைத்துறை பயணம் மேலும் வெற்றி பெற நாவெளி - படலையை தேடி குழுவினர் சார்பாக வாழ்த்துகிறோம்.